Regd No. M. 4900 16-பக்கங்கள்.

# குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 22-1-1949 சனிக்கிழமை } மலர் 20.

## தடிகளும் தடைகளும் ஏன்?

★

இந்திமொழி யாதரிப்புக் கிளர்ச்சி யைநான்
இன்றும் இனியும் எதிர்ப்பேன் என்றார் நேரு
இந்திக்கு வால்பிடிப்போர் எல்லாம் திரண்டு
ஏன் போய்ப்போ ராடவில்லை நேரு வோடு?
இந்தியினை ஈ.வே.ரா. எதிர்த்து நின்றால்
இங்குமட்டு மேன் தடிகள் வீச வேண்டும்?
இந்திகற்க விருப்பமில்லை என்று சொன்னால்
ஏன்பள்ளி யிடங்கொடுக்க மறுக்க வேண்டும்?

இந்திகற்றல் நாணயமில் செய்கை யென்று
எடுத்துரைத்தார் அன்றோர் நாள் கோபால்ரெட்டி
இந்தியேஎம் உயிர்க்குறுதி என்று சொல்வோர்
ஏன் அவர்மேல் தடியெடுத்து வீச வில்லை?
இந்திகற்றல் தாழ்மை தரும் என்(று)ஈ. வே.ரா.
எதிர்த்து நின்றால் ஏன்தடைகள் விதிக்க வேண்டும்?
இந்திகுப்பைத் தாள்களில் தீ மூட்டி விட்டால்
ஏன் நம்மை விழிசிவக்க நோக்க வேண்டும்?

(இரா. வெற்றியரசு)

★

# மதம் மடியட்டும்!

மதம் மடியட்டும்! என்றவுடனே முப்புரி நூலணிந்த முனிவர்களே! என்னைச் சபித்து விடாதீர்கள்?

இரவிலே, பஞ்சணையில் கொஞ்சிடப்பக்குவமுள்ள வஞ்சிக்கொடிகளைத்தேடியலைந்துதிரிந்து, பகலிலே காவியணிந்து கமண்டலமேந்திசாம்பல் தரித்து சமயப்பிரச்சாரஞ் செய்யும் சுவாமிகளே! வீண் மிரட்சியடைந்து விடாதீர்கள்?

மாஸ்கோ பஜனை செய்யும் மாணவர்களே! சமதர்மம் பேசும் சத்தியசீலர்களே! நீங்களாவது சிந்தித்துப் பாருங்கள்! மதம் மக்களுக்குச் சாதித்தது என்ன?

நாங்கள் இந்துக்கள், அதற்காகப் பெருமையடைகிறோம் என்று பேரானந்தக் கடலில் மூழ்கும் மெய்யன்பர்களே! சிவநேசச் செல்வர்களே! இந்து மதம் யாரால், எப்போது, எதற்காக ஏற்பட்டது? இந்து என்பதற்குப் பொருளென்ன? என்பது போன்ற பகுத்தறிவு வினாக்களை எழுப்பி அதற்கு விடை என்ன? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்! சிந்திக்கத் திறனில்லாவிடில் ஒரு முறை ஈரோடு சென்று வந்து சிந்தித்தால் பித்தந்தெளிந்து உண்மை புலப்படும்.

வளமற்ற வறண்ட பாலைவனப் பிரதேசத்திலிருந்து, ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு இந்த நாட்டில் குடியேறிய ஆரியர்கள், இங்கு வருவதற்கு முன்பு இந்து மதம் என்ற ஒரு மதம் இங்கு இருந்ததாக எந்த நூலிலும், வரலாற்றிலுங்கூறவில்லை. ஆரியர் இந்த நாட்டிற்கு வந்த காலந்தான் இந்நாட்டில் இந்து மதம் பரவிய காலமாகும். ஆகையால் இந்து மதம் ஆரிய மதம் என்ற உண்மை புலனாகிறது. இந்து என்ற சொல்லுக்கு துன்பம் என்ற பொருளை, உபநிடதத்தை ஊன்றிப்பார்த்தவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டிருக்கும். ஆதலின் துன்பமடையுங் கூட்டங்களுக்கே இந்து என்ற பெயர் ஏற்பட்டது என்ற உண்மை இதனால் விளங்குகிறதல்லவா? ஆரியர்கள் இருக்க இடமும் உடுக்க உடையும் உண்ண உணவுமின்றி நாடோடிகளாக நாடுதோறுஞ் சுற்றித்திரிந்து துன்பமடைந்த கூட்டமாதலால் அவர்களுக்கே இந்து என்ற பெயர் ஏற்பட்டிருக்குமேயல்லாது முப்புறங்கடலிருக்க, அக்கடலில் முத்திருக்க; மண்ணைத் தோண்டினால் தங்கமிருக்க, காட்டில் அகிலுந்தேக்குமிருக்க, வற்றாத ஜீவநதிகள் பாய்ந்து வளங்கொழிக்கும் வயல்களிருக்க, அதைவிட்டு அயல்நாடு சென்று அன்னக்காவடியாகத் திரிந்து அல்லற்பட்டோமென்று தமிழன் வரலாற்று நூலிலே காண முடியுமா? சரித்திரத்தைச்சான்றுக்கழைத்தால் சாட்சி சொல்லுமா? சொல்லாதென்றால் பிறகு நாம் இந்துக்கள் அல்ல என்ற முடிவுக்குத் தானே வரவேண்டும்.

பிழைக்க வழி தேடி இந்நாட்டிற்கு வந்த நாடோடிகள் நம் வேந்தர்களை அணுகி, "நாங்கள் கடவுளர்கள்வாழும் நாட்டிலிருந்து வந்துள்ளோம், நாங்கள் பிர்மாவின் முகத்தில் தோன்றியவர்கள், நாங்கள் பூதேவர்கள், பிராமணர்கள்; நீங்கள் பிர்மாவின் காலில் தோன்றியவர்கள் ஆதலால் சூத்திரர்கள் (தாசிமக்கள்), நாங்கள் தங்களிடத்தில் தானம் வாங்குவதற்காகக் கடவுளரால் அனுப்பப்பட்டவர்கள், நீங்கள் எங்களுக்குத் தானங்கொடுப்பதற்காகவே பிறந்தவர்கள், பிராமணர்களிடம் கூலிபெறாமல் பணி செய்து வந்தால் மோட்சலோகத்திற்குச் செல்லலாம், இல்லையேல் நீங்கள் நரகத்தில் உழல்வீர்கள்" என்ற பொய்யுரைகளைக்கூறி கள்ளங்கபடமற்ற நம் வேந்தர்களைப் பல வழிகளால் எளிதில் ஏமாற்றி, நம்மைப் பகுத்தறிவுக் கொவ்வாத பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கச் செய்து, இந்து என்ற அவர்கள் மதத்தையும் நம்மைக் கைக்கொள்ளச் செய்துவிட்டார்கள்.

தங்கள் திட்டங்கள் என்றென்றும் நிலைத்திருக்க, அவற்றிற்கேற்பப் பல அண்டப்புளுகுகளை அமைத்து, இந்து மத நூல்கள் எழுதப்பட்டு, அவற்றை நம்பும்படி செய்து, நம்மை மதமென்னும் மடமையில் ஆழ்த்தி விட்டார்கள்.

சைவ சமயப் பிரச்சாரஞ் செய்யும் சந்நிதானங்களே! உங்கள் சைவ சமயக் குரவர் சாற்றிய பாடல் ஒன்று தருகிறேன். படித்து அதன் கருத்தை அறிந்து உங்கள் கருத்தை மாற்றிக்கொள்வீர்களா? முடியாவிட்டால் இக்காலத்தில் இக்கருத்துள்ள பாடல் நடமாடலாமா? என்று சிந்தித்தாவது பாருங்கள்!

"பிடியதன்னுருவுமை
கொளமிகுகரியது
வடிகொடு தனதடி
வழிபடுமவரிடர்
கடிகணபதிவர அருளினன்
மிகு கொடை
வடிவினர் பயில் வலி
வலம் வுறையிறையே"

படித்தீர்களா? பாலுண்ட பாலகன் பார்ப்பனச் சிறுவன் பாடிய பாடல்தனை.

எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த இந்துமதக்கடவுளாகிய சிவனும் அவரது பத்தினிதேவியான உமாதேவியும் ஒரு பூங்காவிலே உல்லாசமாகக் கட்டித்தழுவிக் கனிரச மொழிகளைக் கலந்து பேசிக்கொண்டிருக்கையில், மானிடர்கள் விரும்பும் தேகப்புணர்ச்சியில் விருப்பமுண்டாகவே, எப்படிப் புணர்ச்சி செய்தால் வெகு நேரம் அவ்வின்பத்தை யனுபவிக்கலாம் என்று ஆராய்ச்சி செய்து, யானை வடிவத்தில் புணர்ச்சிசெய்தால் நீண்ட நேரம் சிற்றின்பக்கடலில் மூழ்கலாமென்றுணர்ந்து, சிவன் ஆண்யானையாகவும் உமாதேவியார் பெண்யானையாகவும் உருவெடுத்து, சிற்றின்பக் கடலில் வெகுநேரம் நீந்தி, அதன் பயனாக உமாதேவி கருவுற்றுக், குழந்தை யானைத் தலையுடன் பிறக்கவே, விநாயகனென்று பெயரிட்டதாகப் புராணங் கூறுவதும் உங்கள் சைவசமயக்குரவர் சாற்றிய தேவாரப்பாடலும் ஒன்றுதானா? அல்லது தங்கள் கருத்து வேறா? கருத்து சரி என்றால் அக்கருத்துடைய ஆபாசக் கடவுளை வணங்கலாமா? வணங்குவதால் நன்மை என்ன? அறிவு அட்டுக் கடைக்குப் போவதைத் தவிர வேறு பயனுண்டா? அக்கடவுளைத் தோற்றுவித்தது இந்துமதமல்லவா? அம்மதத்தை நம்மதமென்று பின்பற்றலாமா? "ஒன்றேகுலம் ஒருவனே தெய்வ"மென்ற நம் உயர் பண்பை நசுக்கி ஆயிரம் ஆயிரம் சாதிகளும் பல கோடிக் கடவுள்களும் உண்டானது இந்து மதத்தாலல்லவா? இந்நாட்டு ஆதிக்குடிகளை தீண்டாத மக்களாய்ப் பஞ்சமர்களாய்ப் பாமரர்களாய் ஆக்கியது இந்துமதமல்லவா?

மதமதமென்று மமதையடையும் மாமிசப் பிண்டங்களே! உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரின் உயிரை உறிஞ்சி உப்பியது இந்துமதமல்லவா? எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றி அதைக்கண்டு களித்தது இந்துமதமல்லவா? நந்தனை நெருப்பிலிட்டு வாட்டியதும் சீர்திருத்த அண்ணல் இராமலிங்கத்தை இரையாக்கியதும் இரக்கமற்ற இந்துமதமல்லவா?

கருணைக் கடல் காந்தியாரைப் பட்டப்பகலிலே பார்ப்பனக் கோட்சே படுகொலை செய்ததைப் பாமரன்கூட

(தொடர்ச்சி 16ம் பக்கம்)




## காட்சி 24.

[தாசி வீடு.]

உறுப்பினர்:- தாசிகமலா, விஸ்வன், இரஞ்சன், இராகவன், ஆடிட்டர், சப்இன்ஸ்பெக்டர், போலீஸ்கள்.

கதைஅமைப்பு:- [தாசியின் மோகலாகிரியிலிருந்த விஸ்வனை இரஞ்சன் சுட்டுக் கொன்று விட்டுப் பழியை இராஜன் மீது சுமத்துகிறான்.]

தாசி கமலா:- [நடனமாடுவதற்குரிய ஆடை அணிகள் தரித்து அழகிய தோற்றம் அளிக்கிறாள்.]

விஸ்வன்:- ஆடிட்டர்சார்! எங்கே இன்னும் இரஞ்சன், இராகவன் இருவருமே வரக்காணோம்?

இரஞ்சன்:- [வரும்போதே] இதோ வந்து கொண்டுதானே இருக்கிறோம்...

ஆடிட்டர்:- வாருங்கள் வாருங்கள்! உங்களுக்கெல்லாம் வயது நூறப்பா நூறு!!

இராகவன்:- ஏனப்பா ஏன்?

விஸ்வன்:- நானும் நினைத்தேன் நீங்களும் வந்து விட்டீர்கள் அல்லவா? அதற்காக ஆடிட்டர் சார் அப்படிச் சொல்கிறார்...

ஆடிட்டர்:- ஆமா ஆமாம்.

இராகவன்:- அப்படியானால், நினைத்தவருக்கு எத்தனை வயது...?

ஆடிட்டர்:- அவரும் கிட்டத்தட்ட ஒரு நூறு வயதுக்கு இருப்பார்...

இரஞ்சன்:- இருப்பார்! எமன் ஏமாந்தால் இருநூறு வயதுக்குக் கூட இருப்பார்...அஹ்ஹஹ்ஹா...உம். நடக்கட்டும் நாட்டியம்!

தாசி கமலா:- [சிருங்கார ரசம் ததும்பும் நாட்டியம் ஆடுகிறாள்.]

இரஞ்சன்:- சபாஷ்...! பேஷ் பேஷ்...!! ஆஹ்ஹா...!!!

ஆடிட்டர்:- அடடடடா...! என்ன ஆட்டம்...!!

விஸ்வன்:- ஆஹா! ஆடுவது கமலாதானா...? அல்லது தேவ கன்னிகளா...?

இராகவன்:- அடடா...!என்ன வருணனை!!

இரஞ்சன்:- விஸ்வா...! பார்த்தாயா!! எப்படி?

## பெரியவன், சிறியவன்!

இவன் பெருமைக்குரியவன், இவன் பெருமைக்குரியவன் அல்ல என்பதை நீ எதைக் கொண்டு முடிவுகட்ட வேண்டும் தெரியுமா? அவன் பிறந்த பிறப்பையோ அல்லது அடைந்திருக்கும் செல்வத்தையோ கொண்டு முடிவு கட்டிவிடாதே! அவன் பெற்றிருக்கும் அறிவுகூட அவனை அளக்கப்பயன்படாது! அவனுடைய செயலைப் பார்! பின் சிந்தித்து முடிவு கூறு அவன் பெரியவனா? சிறியவனா? என்பதை!

—திருவள்ளுவர்.

விஸ்வன்:- ஆஹ்ஹா...!! என்ன அழகு...!!!

இரஞ்சன்:- ஆம், ஆம்! விஸ்வா! அவளுடைய ஒவ்வொரு உறுப்புகளின் அழகையும், திரட்சியையும் நன்றாகக் கூர்ந்து பார்த்து ரசியப்பா...ரசி! ஆனந்தமாக ரசிச்சுக் கொண்டே இருப்பா...இரு!!

விஸ்வன்:- [எழுந்து கமலாவை ஆலிங்கனம் செய்யப்போகிறான்] ஆஹா...! கமலா....!!

இரஞ்சன்:- [கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டிக்கொண்டு] டேய்! விஸ்வம்!!

விஸ்வன்:- [திரும்புகிறான்—'டுமீள், டுமீள்' என்ற சத்தம் கேட்கின்றது...மார்பிலிருந்து இரத்தம் கொட்டுகின்றது.] ஆ...! அய்யோ....!! அப்பா!!—அடேத் துரோகி...

இரஞ்சன்:- நானா துரோகி...? பணமடாபணம்! ரெண்டுலெட்ச ரூபாய்கள்...! ஆஹ்ஹஹ்ஹா...!!

விஸ்வன்:- ஆம்! இரண்டு லட்சம் மட்டுமா? விமலாவும், அவள் மூலம் அவனுடைய திரண்ட அய்சுவரியங்களும்...எங்கே? எங்கே?? எங்கே...???

இரஞ்சன்:- இதோ ... மீண்டும் வாங்கிக்கொள்!!

[சுடுகிறான் மீண்டும்.]

விஸ்வன்:- அய்யோ...! அப்பா...!!

[என்று வீழ்ந்து மாள்கிறான்.]

இரஞ்சன்:- மோசக்காரப பயல்! தொலைந்தான்!! ரெண்டு லெட்சத்தையும் அபேஸ் பண்ணிவிட்டு...இருபத்தைந்து ரூபாய்தரவந்தானய்யா! இருபத்தைந்து ரூபாய்!!

இராகவன்:- ஆமாம்...துரோகி! தொலையட்டும்!!

ஆடிட்டர்:- என்ன பேராசை இவனுக்கு? இத்தகைய சுயநலப் பாவிகளின் ஆவிகளெல்லாம் இப்படித்தான் அழியவேண்டும்! அழியட்டும்!! ஆசை ஒழியட்டும்!!!

இரஞ்சன்:- சரி! ஆடிட்டர்சார்! போலீஸுக்குப் போன் பண்ணுங்கள்! ராஜன் வந்து விஸ்வனைச் சுட்டுவிட்டு ஓடுகிறான் என்று சொல்லுங்கள்!!

ஆடிட்டர்:- [வெளியே சென்று போன் பண்ணிவிட்டு வருகிறார்]

இரஞ்சன்:- அடியே கமலா! ஞாபகமிருக்கட்டும்! என்னைப்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை

சிறுகதை

மூன்றாம் பருவம்

# பயித்தியக்காரன்

போட்டி

எண் 6.

“பயித்தியக்காரன்...!”

ஆம்! அவன் ஒரு பயித்தியக்காரன்தான் இப்போது. தெருவில் உள்ள சிறுவர்கள் எல்லாம் அரைப் பயித்தியமாக இருந்த அவனை முழுப் பயித்தியக்காரனாக அடித்து விட்டனர். பாவம்! அவர்கள்தான் என்ன அறிவார்கள் அவனது இறந்த கால வாழ்வைப்பற்றி!

அவன் பயித்தியக்காரன்தான் இப்போது. ஆனாலும் அவன் கூறுகிறானே... அல்ல ... பயித்தியம்... ஏதேதோ உளறுகிறானே அந்த வாக்கியங்களில் மட்டும் பொருள் இல்லாமலில்லை. பொருள் மட்டுமா?... அந்த உளறல்களில் அவனது வாழ்க்கையும் அல்லவா பின்னிக்கிடக்கிறது!

அதோ, அவன் கூச்சலிடுகிறான் பாருங்கள். பயித்தியம்தானே! கூச்சலிடத்தான் செய்யும்!

> “பார்ப்பனியத்தைக் குழிதோண்டிப் புதையுங்கள்! பார்ப்பனர்களை விடாதீர்கள்! அவர்களுடைய பெண்கள்—பெண்களா அவர்கள்!—பேய்கள்! அவர்களை நம்பாதீர்கள். நம்பாதே”...!

“சீ! இவனுக்கென்ன இது! பயித்தியமல்லப்பா இவன்! ஏதோ...”

பல கற்கள் பயித்தியத்தை நோக்கிப் பறந்தன.

“பயித்தியக்காரன்!......பயித்தியக்காரன்!”

* *

குறிஞ்சிப்பாடி குலசேகரனை அறியாதார் அந்தசுற்றுவட்டாரத்தில் யாருமில்லை! பெரிய சீர்திருத்தவாதி மட்டுமல்ல, அவன் பெரிய செல்வவானுங்கூட! அச்சுற்று வட்டாரத்தில் எங்கேயாவது ஒரு பொதுக்கூட்டமென்றால் அதன் காரணவான் குலசேகரன்தான். அதில் அவன் பேச்சு? கனல் கக்கும்படியான வேகம். கருத்து மிக்க சொற்பொழிவு கன்னித் தமிழில்! அவனது ஒவ்வொரு பேச்சிலும் பகுத்தறிவு பளபளப்புக்காட்டும். அறியாமைக்கு அணுக்குண்டைப் போடும் அவனது பேச்சு!

குறிஞ்சிப்பாடி பெரிய நகரமல்ல. ஆயினும் பல சிறந்த செல்வமிக்க [illegible] [illegible]களையும் கட்டடங்களையும் கொண்டதுதான். அவைகளில் சிறந்தது குலசேகரனுடையது என்று கூறத் தேவையில்லை.

அவ்வூரில் ஏழை மாணவர் கல்வி பெற ஏதுவாக எந்தவசதியும் இல்லை என்பதையுணர்ந்தகுலசேகரன் தன்னுடைய மேற்பார்வையிலேயே ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி ஏழை மாணவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளும் செய்து வந்தான். மாணவர்களுக்குத் தேவையான உடை, உறைவிடம், உணவு யாவும் குலசேகரனதுதான்.

பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அறிவிலும் சீர்திருத்தத்திலும் ஆர்வமுள்ளவர்களாய் பயன் தரத்தக்க முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர். பள்ளியில் இருந்த ஆசிரியர்கள் அனைவரும் திராவிடர்கள்தான். பள்ளியுடன் மட்டும் நின்றுவிட்டவில்லை குலசேகரனின் சீர்திருத்தம்! புரோகித ஒழிப்புப் பொதுக்கூட்டங்கள் பல நிகழ்த்தப்பட்டன. சேகரனின் முயற்சியால் மூலை முடுக்குகளிலெல்லாம் சுயமரியாதைத் திருமணங்கள் ஏற்படலாயின.

வருவாய் குறைந்த பின்னும் வைதீகக் கூட்டம் சும்மாவா இருக்கும்? வழிதேடிற்று குலசேகரனின் குடியைக் கெடுக்க!

* *

பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வந்த ஆசிரியர் அம்பலவாணர் தனது உடல் நலமின்மையால் பள்ளி வேலையிலிருந்து விலகிவிட்டார். குலசேகரனும் வேறு ஆசிரியரை அமர்த்த அரும்பாடுபட்டார். ஆயினும் வேறு ஆள் கிடைக்கவில்லை.

அச்சமயத்தில்தான் வைத்தியநாத அய்யர் குலசேகரனிடம் வந்தார். வைத்தியநாத அய்யர் ஒரு ஆசிரியர்—வைதீகப் பிடுங்கல்—வறுமையில் நன்றாக அடிபட்டவர். தன் வறுமையை எடுத்துக்கூறி, தான் பள்ளியில் ஒழுங்காக உழைத்து வருவதாகக் கூறினார். கெஞ்சிக் கூத்தாடினார் ஆசிரியர் வேலையை அளிக்குமாறு!

இரக்கம் என்பது அனைவர்க்கும் பொதுதானே! அவர் ஒரு ஆரியர் என்பதற்காக சேகரன் அவரைத் தள்ளிவிடவில்லை. வேறு ஆசிரியர் கிடைக்காத காரணத்தால் வேறு வழியின்றி வைத்தியநாதரையே வேலையில் அமர்த்திவிட்டான். அவரும் முதலில் சரியாகத்தான் இருந்து வந்தார். ஆயினும் அவருடைய இன உணர்ச்சி அவரை விட்டுப்போகுமா? வர வர, மாமியார்.........?

அன்று வைத்தியநாதர் தன் வீட்டிற்கு வந்துபோகுமாறு அழைத்தார் குலசேகரனை! முதலில் குலசேகரன் வர மறுத்தானாயினும், அவரின் நிர்ப்பந்தத்திற்காகச் சென்றான் அவருடைய வீட்டிற்கு!

வைத்தியநாதரும் குலசேகரும் வீட்டிற்குள் நுழைகையில் வாயிற்படியில் ஒரு மங்கை நின்றிருந்தாள். இவர்களைக் கண்டதும் தனது முல்லைப் பற்களைக் காட்டிவிட்டு மறைந்துவிட்டாள் வீட்டிற்குள். இவர்கள் இருவரும் உட்சென்றனர், அம்மங்கை இருவருக்கும் குடிப்பதற்குப் பானம் கொடுத்தாள். குலசேகரன் குடித்தபடியே மங்கையைப் பார்த்தான். அவளது உதடுகளில் ஒரு லேசான புன்னகை தவழ்ந்தது. அவளது அங்க அமைப்புகள்...! குலசேகரனின் உடலில் ஏதோ ஒருவித புத்துணர்ச்சி பாய்ந்தோடியது. வைத்தியநாத அய்யரும் இந்த ‘ஒரு நிமிட’ வேலைகளையெல்லாம் பார்த்தும் பார்க்காதவர்போல் இருந்தார். மங்கை மறைந்து விட்டாள். இருவரும் பல விஷயங்களைப் ப[illegible]ப் பேசினர். இறுதியில் சேக[illegible]

[illegible]

[illegible]

[illegible] குலசேகரன்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

## தவறுக்கு வருந்துகிறோம்.

இரண்டாம் பருவப் போட்டியில் கதை எழுதியவர்களின் பட்டியலை வெளியிட்டபோது ஒரு தவறு நேர்ந்துவிட்டது. அதற்காக வருந்துகிறோம். 2-ம் பருவத்தில் “லட்சியவாதி” என்ற கதையை எழுதியவர் [illegible] [illegible] [illegible] பா[illegible]ரத்தினசாமி [illegible] [illegible] வேண்டும்.

# சுதந்தர வீரன் ரிஜாலின்!

★

பிலிப்பைபின் தீவுகள், பூகோளப் படத்தில் எங்கேயுள்ளது என்பதையறியாத எத்தனையோ தோழ நண்டு. அவை கிழக்கிந்திய தீவுகளுக்கு சற்று வடபாகத்தில், பசிபிக்மகா சமுத்திரத்திற்கும் சீனக் கடலுக்கும் மத்தியில் உள்ள ஒரு சிறு தீவுகளின் கூட்டம். ஒருகோடிக்கு சற்று அதிகமான மக்களையுடையது. லூஸான், கேமரின்ஸ், மிண்டேரோ போன்ற பனிரெண்டு சிறிய தீவுகள் சேர்ந்ததாகும். அங்கு புகையிலை, சர்க்கரை, காப்பிக் கொட்டை, அரிசி, கொக்கோ போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அது 1898-ம் ஆண்டு வரை ஸ்பெயின் நாட்டு மக்களால் ஆளப்பட்டதாகும். அந்த ஆண்டுக்குப் பிறகு அய்க்கிய அமெரிக்கக் காரர்களால் பிடுங்கிக்கொள்ளப்பட்டதாகும்.

அடிமை எண்ணம் ஆழப்பதிந்து விட்டால், என்ன ஆகும் என்பதை நம்மைவிட அறிந்தவர்கள் இந்த உலகில் யாரும் இருக்கமாட்டார்கள். அன்றைக்கு, மூன்று நூற்றாண்டுகளாக ஸ்பெயின் நாட்டாருக்கு அடிமைப் பட்டுக்கிடந்த பிலிப்பைபின் தீவு மக்கள், தங்கள்நாட்டு நாகரீகத்தையே அடியோடு மறந்து கிடந்தார்கள். அந்த நாட்டை அடிமையாக்கிக் கொண்டோரின் ஆதிக்கமே அதற்குக் காரணம். இது மற்றைய நாடுகளைப் பிடித்துக்கொள்வோரின் இயற்கைக் குணம். அவ்வளவு மோசமாய் அடிமைப்பட்டுக்கிடந்த அந்நாட்டுப்பூர்வீக மக்கள் தங்கள் சொந்த நாகரீகம் என்ன என்று தெரிந்துகொள்ள முடியாத நிலைக்கு, வேண்டிய ஏற்பாடுகளைச் சரிவர செய்தே வந்தார்கள்.

மற்றவர்களால் ஆளப்படும் ஜாதியார் என்று ஏற்பட்ட அன்றே அவர்களிடம் அடிமை மனப்பான்மை ஆதிக்கம்கொண்டது. தாங்கள் அடிமைகள் என்பதை மறைக்கப் போலி வேஷம் புனைய முனைந்ததில் தங்கள் பூர்வீகப் பெருமையை மறந்தார்கள். தங்கள் மதத்தைவிட்டு ஸ்பானியருடைய மதத்தைத் தழுவினார்கள். ஸ்பானியருடைய நாகரீகத்தை அப்பட்டமாய் காப்பி அடிப்பதில் போட்டியிட முயன்றனர். தங்களுக்கு இயற்கையாயிருக்க வேண்டிய சிந்தனை என்னும் செல்வத்தை இழந்தார்கள். ஸ்பானியர்களின் சுகதுக்கங்கள் தங்களுடையன என்னும் அளவுக்கு வந்துவிட்டார்கள். இன்னும் வெளிப்படையாய்ச் சொல்லவேண்டுமானால் ஸ்பெயின் நாடே தங்களுடைய தாய்நாடு என்று துணிந்துகூறவும் கூசவில்லை. ஸ்பெயின் நாட்டைத் தங்கள் தாய்நாடு என்று சொல்வதில் பெருமையும் கொண்டார்கள்.

ஆதியில் இந்நாட்டு ஆரியர்கள் ஆங்கிலேயர்களை அழைத்துவந்து, ஆதிக்குடிகளை அடிமையாக்கிவிட்டு அந்த ஆரியரின் ஆதிக்கம் அசைவு கண்டவுடன் ஆங்கிலேயரை விரட்டுவதாய் ஆர்ப்பாட்டம் செய்தது நாம் இன்று பார்த்த காட்சி. ஆனால் அந்த பிலிப்பையின் நாட்டார் தங்களை ஸ்பானியர்கள் என்று நினைத்துக் கொண்டு ஸ்பானியர்களுக்குள்ள உரிமைகளை தங்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்டவுடன் ஸ்பானியர்கள் இந்த அடிமைகளுக்கும் (பிலிப்பையினர்களுக்கு) சம உரிமை ஒரு கேடா என்று கேட்டார்கள் என்பதை பிலிப்பையின் சரித்திரம் கூறுகிறது. பெருமை எனக்கருதிச் செய்த பிலிப்பையினர்களின் செயல், அவசரக்காரனுக்குப் புத்திமட்டு என்றதைப்போல் தங்களை ஸ்பானியர்கள் என்று சொல்லிக் கொண்ட அடிமைதான் மிச்சமாயிற்று. ஆனால் அந்நாட்டின் ஒரு சில அறிஞர்கள் அதை மாற்றக் கிளர்ச்சி செய்தார்கள். அக்கிளர்ச்சி மற்றவருக்குக் கெட்டாமல்மாறாட்டம் செய்துவிட்டார்கள் மதிமிகப்படைத்த ஸ்பெயின் நாட்டு அரசியலார்.

உலகம் தோன்றி பலகோடி வருடங்கள் ஆகிவிட்டன. அரசாங்கம் தோன்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டன. அடிமைகள் தோன்றி 5, 6-ஆயிரஆண்டுகள் ஆயின. அடிமைத் தேசங்கள் தோன்றி 5, 6-நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. அதிலிருந்து அடிமை நாடுகளில் பிறந்த வீரர்கள் பலர். அந்த அடிமை நீங்க அதிகாரவர்க்கத்துடன்போராடித்தாய் நாட்டின் விடுதலைக்காக ஆவி விடுத்தவர்கள் அநேகருண்டு. இதை உலகச் சரித்திரம் ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இத்தகைய வீரன் ஒருவன் இல்லையே நம்மை நமது சுதந்தரப் போராட்டத்திற்கு இழுத்துச்செல்ல என்று அன்றையப் பிலிப்பையின் மக்கள் திகைத்து நின்றார்கள். சம உரிமை கோரி ஸ்பானிய மக்களிடம் நேர் நின்று போராட நேரிய தலைவன் இல்லையே என்று ஏங்கி நின்றார்கள் பிலிப்பையின் மக்கள். அத்தகைய சமயத்தில் தோன்றிய வீரன்தான் நாம் கூறும் டாக்டர் ஜோஸ்ரிஜாலின்.

ஆப்ரிக்கா கண்டத்தின் வடமேற்குப் பாகத்தில் உள்ள கேனரி தீவுகள் என்னும் தீவில் லாகுனா என்னும் மாகாணத்தில் உள்ள கலம்பா என்னும் ஒரு சிறிய நகரத்தில் 1861-ஆண்டு பிறந்தார். அத்தீவுகள் அன்று ஸ்பெயின் நாட்டாருக்குச் சொந்தமாய் இருந்தன.

அந்த சிறிய நகரில் தோன்றிய ஜோஸ்ரிஜாலின் தனது இளமைப்பருவத்தை, பிலிப்பையின் தீவுகளில் உள்ள மணிலா என்னும் ஊரில் கழித்தார். அங்கேயே அவரதுஆரம்ப கல்வியையும் அடைந்து விட்டார். பிறகு ஸ்பெயின் நாட்டின் தலைமைப் பட்டணமாகிய மாட்ரிட் நகரின் கலாசாலையில் தனது உயர்தர படிப்பை முடித்தார். அங்குதான் அவர் வைத்தியக் கலையில் டாக்டர் பட்டம் பெற்றதோடு தத்துவக் கலையிலும் பட்டம் பெற்றார். அதோடு அன்னாரின் கல்வி ஆசை அடங்கிவிடவில்லை! பிரான்ஸ் சென்றார், ஜெர்மனி சென்றார், ஆங்காங்குள்ள கலாசாலைகளிலும் சேர்ந்து படித்தார். அதன் பயனாய் பல பாஷைகளில் பண்டித்யம் பெற்றார். தாய் நாட்டின் மொழிகளைத் தவறில்லாது கற்று தேறியதுடன் ஸம்ஸ்கிருதம், ஸ்பானியம், கிரீக், லத்தின், பிராஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் போன்ற பல பிறமொழிகளையும் அறிந்து கொண்டார்.

அவரது உடல் அய்ரோப்பிய நாட்டிலிருந்தாலும் உள்ளம் மட்டும் தாய் நாட்டிலே தாவி நின்றது. தாய் நாட்டின் சீர்குலைவான நிலைமையையும், மக்கள் படும் துயரங்களையும் அவர் அணுஅணுவாய் ஆராய்ந்தார். நாடிழந்து நலிவுற்று அந்நிய ஆட்சியில் அல்லலுறும் பிலிப்பையின் மக்களின் தொல்லை நீங்க மருந்துண்டா என நுணுகி ஆராய்ந்தார். பிலிப்பையின் மக்களிடையே படர்ந்துள்ள அடிமை மனப்பான்மை அகன்றாலொழிய அந்நியர் ஆதிக்கம் அழிய வழியில்லை என்று எண்ணினார். அத்தகைய எண்ணம் எடுபட ஏது செய்வதென்று ஏக்கமுற்றார். முடிவில் பிரசாரமே பெரியதுணை என்ற துணிவை அடைந்தார். அது சமயம் அவர் ஜர்மனியில் இருந்து வந்தார். அந்நிய ஆட்சி-பிலிப்பையின் மக்களை எத்தகைய சீர்கேடான நிலைக்கு ஆளாக்கி விட்டது என்பதை அப்படி சித்தரித்து ஒரு நாவலை ஸ்பெயின் மொழியில் எழுதி வெளியிட்டார். ஆனால்மற்றைய அடிமைகளைகொண்டேஆட்சி நடத்தி ருசிகண்டஅரசாங்கவர்க்கம் சும்மா இருக்குமா? அப்புத்தகத்தை பிலிப்பையின் தீவுகளுக்குள் செல்லக்கூடாது என்று ஸ்பெயின் அரசாங்கம் தடைப்படுத்தி விட்டது. ஆனால் பிலிப்பையின் நாட்டிற்குள்

செல்லாதவாறு ஏற்பாடு செய்யப்பட்ட அத்தடையுத்தரவே உலகம் பூராவுக்கும் அப்புத்தகத்தைப் பரப்பி விட்டது. அப்புத்தகத்தைப் படித்தாலும் படுகொலை செய்யப்படுவார்கள் என்று பிலிப்பையின் மக்கள் பயமுறுத்தப் பட்டார்கள் ஸ்பானியர்களால். ஆனால் அது என்னமோ பிலிப்பையின் மக்களிடையே பரப்பப் பட்டுத் தான் வந்தது. இப்புத்தகம் வெளியான அய்ந்து ஆண்டுகளுக்குப் பிறகு பிலிப்பையின் மக்கள் சுயநலத்தையும், பயத்தையும்விட்டு தாய்நாட்டின் விடுதலைப்போருக்கு ஒன்று பட்டு முன்வரவேண்டும் என மற்றொரு நாவலை எழுதி வெளியிட்டார். இப்புத்தகமும் தடைசெய்யப்பட்டது. இந்த இரண்டு புத்தகங்களும் வெளி இட்ட சில நாட்களில் ரிஜால் தாய் நாட்டை அடைந்தார். தாய் நாட்டில் ரிஜால் ஸ்பெயின் நாட்டின் வேவு காரர்களால் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வந்தார். இருந்தும் அஞ்சா நெஞ்சுகொண்ட ரிஜால் பலரை ஒன்று திரட்டி ஒரு சங்கம் அமைத்து சுதந்தரப் போராட்டத்தின் பிரசாரத்தை தீவிரமாய் செய்து வந்தார். பிலிப்பையின் பிரசாரத்தை தீவிரமாய் செய்து வந்தார். பிலிப்பையின் மக்களிடையே சுதந்தாதாகம் ஓங்கி வளர வளர ரிஜாலின் நிலைமை மிகவும் நெருக்கமடைந்தது. மீண்டும் அய்ரோப்பாவுக்குச் சென்று விட்டார்.

1891-ம் ஆண்டு ஹாங்காங்கை அடைந்து தான் கற்றகல்வியைக் கொண்டு வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார். ஆனால் அங்கிருந்த ஸ்பானிய ஸ்தானீகர் ரிஜால் தாய்நாட்டிற்கு திரும்பலாம், அங்கு அவருக்கு எந்த இடையூறும் ஏற்படாது என்று பிலிப்பையின் தீவுகளின் பிரதம அதிகாரியின் சார்பில் சொன்னார். பூரிப்பு கொண்டார், புறப்பட்டார் தாய்நாட்டிற்கு. ஆனால் ஆளும் வர்க்கமும் அவரை கப்பலை விட்டிறங்கிய உடன் சோதித்தது. சில ராஜதுரோகக் கடிதங்கள் கைப்பற்றப்பட்டன. அங்கேயே அதிகாரிகளால் கைதியும் செய்யப்பட்டார். பின் எங்காத்துக் காரரும் கச்சேரிக்குப் போகிறார் என்ற முறையில் விசாரணை நடந்து காலவளவு இல்லாது காவலில் இருக்க கடுந்தண்டனை விதித்தார்கள். அய்ந்து ஆண்டுகள் டாபிடான் என்னுமிடத்திலுள்ள சிறைக்குள்கிடந்தார். உயிர் இருந்தும், உணர்ச்சி இருந்தும், எத்தனை நாட்களுக்கு உணர்வற்ற கட்டைபோல் கொட்டடிக்குள்உட்கார்ந்து கிடப்பார். ஏதோ உழைக்க உணர்வு கொண்டார். கியூபா தீவில் டாக்டராக ஊழியம் செய்ய உத்திரவு கேட்டார் கவர்னர் ஜனரலை. கவர்னர் ஜனரலும் உத்திரவு தந்தார். விட்டார் சிறையை; வெளி வந்தார் கியூபா செல்ல.

பிலிப்பையின் நாட்டின் துரதிர்ஷ்டமோ என்னவோ அவர் மணிலா சேர்ந்த உடன் ஒரு பெரிய கலகம் உண்டாயிற்று. அதன் பயனாய் கியூபா செல்லாமல் ஸ்பெயினுக்கு அனுப்பப்பட்டார். இவர் ஸ்பெயின் நாட்டின் மண்மேல் அடிவைப்பதற்குள் அரஸ்ட் செய்யப்பட்டார். காரணம் மத்தியில் எழுந்த கலகத்தை ஒட்டி இவர்மேல் ஒரு பெரிய ராஜ துவேஷ குற்றம் ஜோடிக்கப்பட்டு விட்டது. மீண்டும் பிலிப்பையின் தீவை அடைந்தார்.

பிலிப்பையின் நாட்டில் அவர் வழக்கை விசாரிக்க வென்றே ஒரு தனிக் கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது. அக் கோர்ட்டுக்கு ரிஜாலின் கைகள் பின்புறமாய் இழுத்துக் கட்டப்பட்டு கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். கைகளைக் கட்டியதுடன் மட்டும் அல்ல, அவர் கோர்ட்டில் இருக்கும் வரை ஆயுதம் தாங்கிய படை ஒன்று அவரைச் சுற்றி நிறுத்தப்பட்டது. என் என்றால் தப்பித்து ஓடிவிடுவான் வீரன் என்ற பயம் போலும். ஆம், அந்தப் பேய்க்கூட்டம் அந்த வீரனின் செயலை எப்படி அறியும். பாரதிதாஸன் சொல்லியது போல்

……………….பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும்
சேற்றினுக்கும் கக்கும் விஷப்
பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும்பசிக்கும் இடையறா
நோய்களுக்கும்
பலியாகிக் கால்கைகள் உடல்கள்
சிந்தும் பச்சை ரத்தம் பரிமாறி
இந்த நாட்டை, சலியாத வருவாயும்
உடையதாகத் தந்தவெர்?
அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்
ஏமாந்த காலத்தில் ஏற்றங்
கொண்டோன்
புலி வேஷம் போடுகின்றான்
பொதுமக்கட்கு புல்லளவும்
மதிப்பேனும் தருகின்றானா?

என்ற சிந்தனையை எழுப்பி விட்ட இளங்காளை இனி என் ஓடவேண்டும் என்பதை ஒய்யார அதிகார வர்க்கம் உணராது தான்.

நாகரீக போக்கிற்கான முறையில் சாட்சிகள் கோர்டில் விசாரிக்கப்பட்டார்கள். இவர்கள் தாய் நாட்டின் சுதந்தர வீரர்களை காட்டிக்கொடுத்து தாகு பெரும் தாழ்ந்த கூட்டம்—பிலிப்பயின் மக்களிலேயே தயார் செய்யப்பட்ட சிலர். சாட்சிகள் என்ற தாய்நாட்டின் விரோதிகளின் வாக்கைக்கொண்டு ரிஜால் ஒரு ஸ்பெயின் நாட்டின் விரோதி ஆகையால் 24 மணி நேரத்திற்குள் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் என்ற முடிவு கோர்ட்டாரால் செய்யப்பட்டது. சுதந்தர வீரனை பலி வாங்கிய இந்த தீர்ப்பு 1896-ம் வருடம் டிசம்பர் 29-ம் தேதி சொல்லப்பட்டது.

அஞ்சாநெஞ்சு கொண்ட டாக்டர் ரிஜால் இதற்கெல்லாம் அஞ்சவில்லை. இந்த தீர்ப்பு அவர் வெகு நாட்களுக்கு முன்னே எதிர்பார்த்தது. அறிவியல் வாதிகள் சொல்வது போல் அதாவது 'வீரன் ஒரு முறை சாவான் கோழைகள் பல முறை சாவார்கள்' என்பதற்கிணங்க வீரதைரிய ரிஜால் சுதந்தர போராட்டத்தில் இறங்கும் பொழுதே உயிரை மறந்தவன் ஆகையால் இந்த தீர்ப்பு அவனை ஒன்றும் செய்யவில்லை. 1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ந் தேதி ரிஜால் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சுடுவதற்கு முன் ரிஜாலின் நாடியை பரிசோதித்த டாக்டர் இந்த நெருக்கடியான சமயத்திலும் ரிஜாலின் நாடிகள் சாதாரணமாய் அடித்துக் கொள்ளுகின்றன என்று சொல்லி ஆச்சரியப் படும் படியான அவ்வளவு உரம் பெற்ற உண்மை வீரன் துப்பாக்கியால் சுடப்பட்டு சுதந்தரத்திற்கு உயிர் விட்டான்.

டாக்டர் ரிஜாலின் உடல் மறைந்தது. உயிர் இன்று பிலிப்பையின் மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்தும் ஊடுருவி நிற்கிறது. உண்மை வீரன் அன்று விதைத்துச் சென்ற சுதந்தர விதை இன்னும் துளிர்த்து வளர்ந்து வருகிறது பிலிப்பையின் நாட்டில். உயிர் விட்ட நாள் தான் இன்று பிலிப்பையின் நாட்டில் ஒரு ஒப்புயர்வற்ற திருவிழா நாளாகக் கொண்டாடப்படுகிறது என்றால் உண்மை உழைப்பு ஒரு பொழுதும் வீண் போகாது என்பதில் என்ன தவறு என்பதை சிந்தியுங்கள் இந்நாட்டு வீர வாலிபர்காள்.

"வேலன்"

---

## அநுதாபம்.

ஈரோடு நகர திராவிடர்கழக உறுப்பினரும் மாநாட்டுத் தொண்டர்படைத் தலைவருவான தோழர் ஆர். பெருமாள் அவர்களின் அண்ணார் தோழர் ஆர். ராசு அவர்கள் 20—1—49-ம் நாள் தமது இளம் வயதில் (32) இயற்கை யடைந்தார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அவரின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அநுதாபம். [ஆ-ர்]

# தயக்கமேன் இஸ்லாமியரே?

[✱]

ஆம்; இஸ்லாமிய இளைஞர்களையும் அறிஞர்களையும்தான் கேட்கின்றேன் இன்னும் என் தயக்கமென்று. இன்று நாட்டிலே பல்வேறு நிகழ்ச்சிகள் நம் கண் முன்பே நடைபெற்று விட்ட பிறகு, இனியும் முஸ்லிம்கள் ஒதுங்கி நிற்பதில் அர்த்தமில்லை. தனித்தொகுதி தரைமட்டமாக்கப்பட்டதிலிருந்து மதச்சட்டத்தையும் மண்ணுக்குள் புதைத்தது வரை, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வீசிவிட்டனர் நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து ஆட்சியிலேறிய இந்திய மதப்பற்றற்ற சர்க்கார். இனியும் டெல்லியை நோக்கித் தலை சாய்த்து நிற்பது தற்கொலைக்கொப்பாகும் என்பதை அறிந்து ஆவன செய்ய ஆயத்தமாகுங்கள். கல்கத்தாவில் கையை நீட்டினால் டாக்காவில் தலையை தட்டுகிறான்; சிந்து சீறினால் பாஞ்சாலம் பாய்கிறது; இப்படியே வடநாட்டில் வம்பு வளர்ந்துகொண்டு தானிருக்கிறதே தவிர குறைந்தபாடில்லை. இந்த நிலையில் நாமும் அவர்களோடு உறவுகொள்ள ஆரம்பித்து விட்டால் நம்மையும் அந்த இழிகுணம் பீடிக்காமல் விடாது. ஆகவே அறுத்தெறியுங்கள் அந்த அக்ரமக்காரர்களின் தொடர்பை.

“முஸ்லிம்களின் உற்றதுணைவன் நான்” என்று பலதடவை பெரியார் அவர்கள் கூறிய பிறகும், “திராவிடர் கழகம் முஸ்லிம்களுக்கு என்றும் கேடு புரிந்ததில்லை, இனியும் அவ்வாறே இயங்கும்” என்று அறிவித்ததற்கப்புறமும், பழுத்த ஆஸ்தீகவாதி, தமிழறிஞர் திரு. வி. கல்யாண சுந்தரனார் போன்றார்களும் திராவிடக் கழகத்தில் இரண்டறக்கலந்து விட்ட பிறகும் என்ன சந்தேகம் காண்கின்றனர் இஸ்லாமிய இளவல்களும் அறிஞர்களும் என்றுதான் கேட்கின்றேன். நெஞ்சில் உரமும் நேர்மைக் குணமும் எடுத்ததை முடிக்கும் எண்ணமும் கொண்ட இஸ்லாமிய இளவல்களே! ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பாணம் நம்மீது பாயுமே என்று பயந்து பதுங்குகிறீர்களா? அல்லது திராவிட நாடு கிட்டுமா? கிட்டினாலும் திராவிடத்தில் நமக்குப்பாதுகாப்பு ஏற்படுமா என்றெல்லாம் கேட்டு மனங்குழம்பிக்கொண்டிருக்கிறீர்களா? ஆட்சியாளர் நம்மீது அடக்குமுறைப் பாணம் தொடுக்க நாம் நம் நாட்டை அன்னியனுக்குக் காட்டிக்கொடுக்கும் ஐந்தாம்படை வேலை செய்யவில்லை அல்லது ஒரு பெரிய போரில் நாடு ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது முதுகில் குத்த முயற்சிக்கவில்லை.

வளம்பெற்ற திராவிடம் வடவர் ஆதிக்கத்தில் இருக்கச்சம்மதிக்கமாட்டோமென்று பிற தோழர்களோடு சேர்ந்து கூறுகிறோம். இது தவறு என்று ஆட்சியாளர் எண்ணினால் தண்டிக்கட்டும். அறிஞர்களையும் கவிஞர்களையும் கலைஞர்களையும் பெற்றெடுத்த திராவிடம், அரசியல் சூதில் அய்யாகளிடம் சிக்கி அகில இந்தியப் பிணைப்பில் அடிபணிந்து அஞ்சலி செய்து கிடப்பது கூடாது என்று கூறுகிறோம்; குற்றமா? தரையைத் தோண்டினால் தங்கம், மலையை வெட்டினால் மட்டற்ற மரகதங்கள், கல்லை உடைத்தால் கனிப்பொருள், கடலுக்குள் மூழ்கினால் கருத்துக்கு ஒத்த முத்துக்கள்; இத்தனை செல்வமும் சிறந்து விளங்கும் சீரிய திராவிடம் சிந்தனையற்றோரிடம் சிக்கி சீரழிவது கூடாது என்று கூறுகிறோம்; தவறா? உயர்ந்த உணவுப்பொருட்களையும் உன்னத விலைப் பொருட்களையும் உடலுறுதி கொண்ட உழைப்பாளிகளையும் கொண்ட திராவிடம், மக்காச் சோளத்துக்கு மாற்றுக் கொள்கைக்காரர்களிடம் மண்டியிடுவது மடமை என்று மக்களிடையே கூறுகிறோம்; துரோகமா? கூறட்டும். குறைமதி கொண்டோர் கூறுவர் ஏக இந்தியா தான் இருக்கவேண்டுமென்று. இவர்கள் பர்மா பிரிவதற்கு முன்பும் கூறினர், பாக்கிஸ்தான் பிரிவதற்கு முன்பும் கூறினர், இன்றும் கூறுகின்றனர். ஆகவே இவர்களின் கூற்றை இளித்தவாயர்களின் செவிக்கே விட்டுவிடுவோம்.

“பாக்கிஸ்தான் பகற்கனவு” என்று படாடோபமாக பிரதமப் பாத்திரங்கள் பாட, பத்திரிகைகள் பக்கமேளம் வாசிக்க, தன்னலக்காரர்கள் தாளம் தட்ட, தாசர்கள் தலையசைக்க தடபுடல் தான அன்றும் செய்தனர். பாக்கிஸ்தானைப் பிரித்துவிடாத வரை பாக்கியுள்ள ஸ்தானத்துக்கும் ஆபத்து தான் என்று அவர்களே விழுங்கமுடியாமல் விழுங்கி ஏப்பமிட்டுவிட்டனர். இன்றும் அதே பிரசார பீரங்கி திராவிடத்தைப் பார்த்துத் திருப்பப்பட்டிருக்கிறது. இதைத்தான் முஸ்லிம்கள் சரியானபடி புரிந்துகொள்ள வேண்டும். ஒரு சில வருடங்களிலே பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் ஒரு பாக்கிஸ்தானென்னும் பரந்த நாட்டைப் பிரித்துக்கொடுக்க ஏற்பாடுகள் செய்ய முடிந்த இஸ்லாமியர்களால், திராவிடத்தையும் தைரியமாகப் பிரித்து வாங்கிவிடமுடியும் என்று திண்ணமாகக் கூற ஆசைப்படுகிறேன். திராவிடம் பிரிந்தால்தான் திருந்திய வாழ்வைத் திரும்பப்பெற முடியும். இன்றேல் திருடர்கள் வாழ்வுபோல் தான் நாம் வாழவேண்டும் என்பதை மக்கள் நலத்தைப் பேணும் மதியூக முஸ்லிம் உழைப்பாளிகளும், நாட்டின் நல் வாழ்வு விரும்பும் நேயர்களும் உணர்ந்து வேலைசெய்ய முற்படவேண்டும்.

மதப்பாதுகாப்பு பற்றி மனதைக் குழப்பிக் கொண்டிருப்போருக்கு ஒரு வார்த்தை! பொதுஉடைமை பேசும் ரஷ்யாவிலும் இஸ்லாம் இடையூறின்றி வாழத்தான் செய்கிறது. சர்வாதிகார ஹிட்லர் வாழ்ந்த ஜெர்மனியிலும் இஸ்லாம் சிறப்புடன்தான் வாழ்கிறது. இஸ்லாத்தை இணையற்ற முறையில் தெரிந்து தெளிந்த தலைவர்கள் அமைக்கும் திராவிடத்தில், இன்றிருப்பதைவிடச் சிறந்த பாதுகாப்புகளோடு முஸ்லிம்கள் வாழலாம். மேலும் இஸ்லாம் இழிகுணங்களைக் கொண்டிருக்கவில்லை. மதத்தின் பேரால் மக்களை மடையர்களாக்காது, மதிவளரும் மகத்தான திட்டங்களைக்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

## நண்பர் யார்?

பார்த்தவர், கேட்டவர், பழகினவர், தெரிந்தவர் ஆகிய அனைவரையும் “நண்பர்” என்று கூறாதே! கடிதங்களில் எழுதாதே!

உன்னுடைய நண்பர் என்று ஒருவரைக் கூறிக்கொள்கிறாய் என்றால், அவர் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா?

இடுப்பிலுள்ள ஆடை சிறிது நழுவுமானால், கை தானாகவே சென்று ஆடையை எப்படிச் சரிப்படுத்தி, மானத்தைக் காத்து இடுப்புக்கு உதவுகிறதோ, அதைப்போல உனக்கொரு ஆபத்தென்றால் தாமாகவே வந்து ஆபத்தினின்றும் காக்கவேண்டும்; கேடென்றால் போக்க வேண்டும். அப்பேர்ப்பட்டவர்தான் நண்பர்.

—திருவள்ளுவர்.

## நன்றி.

தமிழரின் புத்தாண்டாம் தைத்திங்கள் முதல் நாளில், திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தும் வாழ்த்தனுப்பிய தோழர்களுக்கும் தோழியர்களுக்கும் நம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர், மானேஜர்.
"குடி அரசு"


# குடி அரசு

22—1—49 சனிக்கிழமை.


## இனி நம் கடன்!

தமிழர்களின் புத்தாண்டு நல்ல அறிகுறிகளோடு காணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் தை பிறப்பதும், பொங்கல் வைப்பதும் வழக்கமாக நடைபெற்று வரக்கூடியதுதான் என்றாலும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆரிய இருளில் சிக்கித் தவித்துத் தன்னிலை மறந்து தாசி மக்களாய்—வேசிமக்களாய் வாழ்ந்த தமிழினம், அவ்விழிவைத் துடைத்துத், தம் மானிடத் தன்மையைப் பேணி, நல் வாழ்வு வாழ்வதற்கான ஊன்றுகோலைப் பெறுவதற்கு வழி பிறக்கவில்லை. இந்தப் புத்தாண்டைக் கருவியாகக் கொண்டு தந்தை பெரியாரவர்களால் தமிழ் மக்களுக்கு ஊன்றுகோல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நாம் நல்ல அறிகுறி என்கிறோம்.

ஏய்க்கப் பிறந்தவன் பார்ப்பான்—ஏமாறப் பிறந்தவன் தமிழன் என்று பார்ப்பனர்கள் எழுதி வைத்துக்கொண்டிருப்பதை நடைமுறையில் வற்புறுத்திக் கொண்டிருந்தன சங்கராந்தி அதுபோன்ற மற்றவைகள். அதாவது தமிழனுக்கு உரியது, பெருமை தரக்கூடியது எதெது உண்டோ, அதெல்லாவற்றையும் உருவை மாற்றி, பெயரை மாற்றிச் சமஸ்கிருதக் கலப்பை—ஆரியக்கலப்பை உடையது போல ஆக்கிவிட்டார்கள் பார்ப்பனர்கள். ஏமாந்த இனம் அதை ஏற்றுக்கொண்டது. பொங்கல் சங்கராந்தியாக ஆனது.

சங்கராந்தியல்ல பொங்கல் தான்! தமிழன் பெருமை கொள்ளக் கூடிய ஒரே ஒரு பெருநாள், உழைப்பை உயர்வுபடுத்தும் நாள் பொங்கல் நாள்! இப் பொங்கல் நாள்தான் தமிழனின் புத்தாண்டுத் தொடக்க நாள்! என்றார் பெரியார் சென்ற இந்தி எதிர்ப்புப் போரில் எழுந்த தமிழ் எழுச்சியின்போது.

போராட்டத்தின் பின் விளைந்த இந்த ஆக்கம், நன்கு வேரூன்றி, இப்போது நன்கு தழைக்கவும் ஆரம்பித்துவிட்டது என்பதை எடுத்துக் காட்டுவதுதான் இந்தப் புத்தாண்டு முதல் வாரத்தில் சென்னையில் நடந்திருக்கும் வள்ளுவர் குறள் [தமிழர் நெறி விளக்க] மாநாடு.

பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும் பேரறிஞர் ஏ. சக்கரவர்த்தி நயினார் அவர்களும் தலைவர்களாயிருந்து நடத்த—தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் வரவேற்க—நாவலர் பாரதியாரவர்கள் துவக்கிவைக்க வரலாற்றுச் சிறப்புடைய இம்மாநாட்டை, தமிழ் நாட்டின் தனிப் பெருந் தந்தை பெரியாரவர்கள் ஜனவரி 15, 16-ம் நாட்களில் நடத்தி வைத்திருக்கிறார்கள்.

"இம் மாநாட்டிற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், பல போக்குடைய மக்கள் வந்து நிரம்பினர். எண்ணிறந்த புலவர் பெரு மக்கள் சேர்ந்தனர். கலைவாணர்களும், வழக்கறிஞர்களும், பெரிய அதிகாரிகளும் கூடினர். கட்சி வேற்றுமை, கருத்து மாறுபாடின்றிக் கூடி "வெள்ளம்போல் தமிழர் கூட்டம்" என்ற கவிஞரின் கனவை நினவாக்கி விட்டனர்" இவை, அன்று அங்கு கூடியவர்கள் கண்டதும் கருதியதும்!

"இன்றையத் தமிழறிஞர்களில், பொதுப் பணி செய்ய வேண்டுமென்கிற பொறுப்புணர்ச்சியுடையவர்களில் பெரும்பாலோர் இந்த மாநாட்டில் கலந்து தங்கள் தங்கள் கருத்துரைகளை—பண்டைத் தமிழரின் நெறிகளை விளக்கியிருக்கிறார்கள்" இது அந்த கூடியவர்களின் ஏக மனதான தீர்ப்பு!

தமிழர் நெறிவிளக்கத்தைக் காரியமாகக் கொண்ட இந்த மாநாடு, உலகத்தில் நடந்திருக்கும் மாநாடுகளுக்குள்ளேயே மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது என்று கூறலாம். மாநாடு என்றாலே 5000-வார்த்தை 10000-வார்த்தைகொண்ட தீர்மானங்களை நிறைவேற்றி விட்டுக் கலைவதுதான் பெருமை என்று கருதப்பட்டு வந்த நிலையை மாற்றி இரண்டே இரண்டு தீர்மானங்களை மிகச் சுருங்கிய முறையில் இம் மாநாடு நிறைவேற்றி இருக்கிறது. ஒன்று, ஆண்டுதோறும் வள்ளுவர் குறள் மாநாடு நடத்துவது. மற்றொன்று, குறளுக்கு எளிய உண்மையுரை ஒன்று காணத் தமிழறிஞர் குழு ஒன்றை அமைத்தது.

"குறள் — 2000-ஆண்டுகளுக்கு முந்திய நூல்!

குறளில் கூறப்பட்டிருக்கும் கருத்துகள்—எல்லா நாட்டவருக்கும், எல்லாக் காலத்தவர்க்கும், எந்தக் கொள்கையர்க்கும் ஏற்றவை!

காலங்கடந்த நூல்!

தமிழ் மறை!

உலகிலுள்ள மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்!"

இவை, சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ்ப் புலவருலகம் குறளைப்பற்றி மக்களுக்குக் கூறிவருவன.

இளம் புலவர்கள் ஆச்சரியப்படும்படியான குறளுக்குப் பெருமை தரும்படியான ஒரு விஷயத்தை நாம் இப்போது இங்கு குறிப்பிடுகிறோம்.

தமிழ்ப் புலவர்களால் ஏகோபித்த முறையில் பாராட்டக் கூடிய ஒரே ஒரு நூல் திருக்குறள் ஒன்று தான். இது ஒன்றே திருக்குறளுக்கு எவ்வளவு பெருமை!

ஏன்? கண்டனம் செய்வதே கற்ற புலமைக் கழகு என்று கருதிக் கொண்டிருந்தவர்களாலும் கூட திருக்குறள் கண்டிக்கப் படாமல் போற்றப்பட்டு வந்திருக்கிறது. சமயச் சேற்றில் நின்று தமிழ்ப் பயிரை நடுவதே தாம் பெற்ற கல்வியின் பயன் என்று அறிவுக்கு வேலி போட்டு வந்தவர்களாலும்கூட அது பாராட்டப் பட்டுத்தான் வந்திருக்கிறது.

இன்று நடமாடும் தமிழிலக்கியங்களுக்குள், தனக்கென்று ஒரு பாராட்டு நூலைப் பெற்ற நூல், குறளைத் தவிர வேறொன்றில்லை.

இப்படி, குறள் போற்றப்படுவதற்கு உண்மையான காரணம் அது எந்த மதத்தையும் தனக்கு அடிப்படையாகக் கொள்ளாததே.

எல்லாப் புலவர்களாலும் பாராட்டக் கூடியதாய், எல்லா நாட்டினராலும் ஏற்கக் கூடியதாய் உள்ள இந்த குறள், குறள் பிறந்த நாட்டிலேயே ஏன் பரவவில்லை? தமிழ் படித்த ஒரு சிறு கூட்டத்தார்களுக்கு இடையே மட்டும், அது ஏன் சிறைப்பட்டிருக்கவேண்டும்? சென்ற பத்தாண்டுகளாகத் தமிழர்களுக்குள் விழிப்பு ஏற்பட்டுப் பெருகி, தமிழைப் படிக்க வேண்டும் என்கிற உணர்ச்சி பொங்கி வழியும் இந்தக் காலத்தில்கூட—தமிழ் நூல் என்றாலே தாராளமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில்கூட, குறள் ஏன் பொது மக்களிடையே பரவ வில்லை?

குறளைப் போற்றும் புலவர் பெரு மக்கள் முதலில் இதற்கு விடைகாண வேண்டும்.

குறள் எழுதப்பட்ட காலம் 2000-ம் வருஷத்துக்கு முந்தியது என்றால், 2000-ம் வருஷங்களுக்கு முந்தியிருந்த தமிழ் நடை எதுவோ அந்த நடையில் தானே எழுதப்பட்டிருக்க முடியும். எளிய நடையிலென்றால் அப்போது எது எளிய நடை என்று எண்ணப்பட்டதோ அந்த நடையில் தானே எழுதப்பட்டிருக்க வேண்டும். இப்போது வசன நடை பெருகியிருக்கும் இந்தக் காலத்தோடு, அந்த நடையை ஒப்பிட்டால், இன்றைக்கும் குறள் நடையை எளிய நடையென்று சொல்லிவிட முடியுமா?

இதனால், இக்கால நடைக்கேற்ப எளிய முறையில் குறள் "ரிப்பேர்" செய்யப்படவேண்டும் என்பது நமது கருத்தல்ல. குறளை—குறள் கருத்தை மக்கள் உட்கொள்ள வேண்டுமென்றால், குறளை விளக்குபவர்கள் மக்களுக்கு விளங்க வைக்கவேண்டும் என்கிற உணர்ச்சியைக் கொள்ள வேண்டாமா? உணர்ச்சி கொண்டால் அதற்குத் தக்கபடி முதலில் தங்களைச் சரிசெய்து கொண்டு அதாவது பாமரமக்கள் பேசும் உயிர்த்தமிழையும் கைக்கொள்ள இறங்கி வரவேண்டாமா? என்று தான் நாம் கேட்கிறோம். குறளை விளக்குகிறோம் என்றுகூறி, அந்த விளக்கம் குறளைக் காட்டிலும் கடுமையானதாய் அதாவது "குறளைப் படித்தாலும் புரிந்து கொள்ளலாம் குறளுக்கு எழுதப்பட்டிருக்கும் உரையைப் படித்தால் அதுகூடப் புரியாதுபோலிருக்கே" என்று சொல்லக் கூடிய விதத்தில் இருக்கலாமா என்றுதான் நாம் கேட்கிறோம்.

குறள் மக்களிடையே பரவாததற்குக் காரணம் இது மட்டுமல்ல. இன்னொரு காரணமும் உண்டு.

குறளுக்குப் பத்துப்பேருடைய உரை ஏற்பட்டிருக்கிறதே ஒரு பெருமை என்று புலவர்கள் கூறுவார்கள். இன்று அந்தப் பத்துரைகளும் இல்லை. இரண்டு, மூன்று பேருடைய உரைகள் காணப்படுகிறது என்றாலும், அதில் அய்யங்கார் பார்ப்பனராகிய பரிமேலழகர் என்பவருடைய உரைதான் சிறந்த உரையாக, ஒரே உரையாக இருந்து வருகிறது. பாக்கி உரைகள் எல்லாம் அழிந்து விட்டனவா? அழிக்கப்பட்டு விட்டனவா? என்கிற கேள்வி ஒரு பக்கமிருந்தாலும், குறளுக்கு இப்படிப் பத்து உரைகள் ஏற்பட்டது தான், குறள் பொது மக்களிடமிருந்து செத்து விட்டதற்கு மற்றொரு காரணமென்று நாம் கூறுகிறோம்.

இப்படி நாம் கூறும்போது, இலக்கியங்களின் வளர்ச்சி முறையை அறியாத நிலையில் நின்று இதைக் கூறவில்லை. ஒரு சிறந்த பழைய இலக்கியமென்றால், காலத்திற்குக் காலம், அந்தந்தக் காலத்திற்கேற்ப அந்த இலக்கியம் மெருகிடப்படவேண்டியது தான் என்றாலும், அந்தக் கருத்தையே கொலை செய்யத் தக்க விதத்தில் திரித்துக்கூறி மெருகு பூசப்படலாமா? என்று தான் நாம் கேட்கிறோம்.

பார்ப்பனர் ஆதிக்கத்திற்கு வந்தது கல்வித்துறை என்று சொல்லப்படும் நிலைமை வந்த பிறகு, தமிழனுக்குப் பெருமை தரக்கூடிய நூல்கள் எல்லாம் அழிக்கப் பட்டு விட்டன என்கிற உண்மையை, இன்றையப் பார்ப்பனர்களின் நடத்தையே படம் பிடித்துக் காட்டுகிறது.

வைதீகப் போக்குக் கொஞ்சமுமில்லாமல் மாட்டு நாக்கைத் தின்னும் பார்ப்பானாயிருந்தாலும், "பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே" என்று ஒரு பார்ப்பனரே பாடிய பாட்டைக்கேட்டால் மனம் பதைக்கின்றான். இந்த மாதிரியான தொடர் எடுக்கப்பட்டு அந்த இடங்களில் புள்ளி வைக்கப்படுவதோடல்லாமல், இறந்துபோன தமிழனுக்குப் பெருமைதரும் வகையில், "வ. உ. சி." என்று பெயர் குறிப்பிட்டிருந்தால் அது மாற்றப்படுகிறது என்பதும் சர்வ சாதாரணமாக 20ம் நூற்றாண்டிலும் நடைபெறுகிறது என்றால், தமிழனைக் கல்வித் துறையில் தலையெடுக்க வொட்டாமல் அடித்து வந்த காலத்தில் எப்படியெல்லாம் உருமாற்றியிருக்கவேண்டும்......

குறள் ஆரம்பத்தையே குட்டிச் சுவராக்கி விட்டனர் பார்ப்பனர்களும் பண்டிதர்களுமென்றால் அதில் தவறில்லை. குறளில் "கடவுள் வாழ்த்து" என்பது எப்படி இடம் பெற முடியும் என்று நாம் பண்டிதர்களைக் கேட்கிறோம்.

இக்கேள்வி சுயமரியாதைக்காரர்கள்—கடவுள் மேல் வெறுப்புக் கொண்டவர்கள் என்கிற முறையில கேட்கப்படுவதில்லை என்பதை முதலில் சொல்லி விடுகிறோம். திருக்குறள், இலக்கணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டதா? அல்லது இலக்கண நெறியைத் தாண்டி எழுதப்பட்டதா? இலக்கணத்தைப் பின்பற்றிய தென்றால் குறளாசிரியரால் பின்பற்றப்பட்ட இலக்கணம் பவணந்தியாருடைய நன்னூலா? தொல்காப்பியருடைய

தொல்காப்பியமா? 12ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது பவணந்தியாருடைய நன்னூல் என்றால், திருக்குறளுக்கு இலக்கணம் நன்னூலாயிருக்க முடியாதல்லவா? பின் தொல்காப்பியத்தைப் பின்பற்றியது குறள் என்றால், ஒருபுத்தகத்தைத் தொடங்குமுன் "கடவுள் வாழ்த்து" கூற வேண்டுமென்று தொல்காப்பியம் கூறுகிறதா என்று கேட்கிறோம். மேலும், ஒரு நூல் எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் தொல்காப்பியம் கூறுகிறதல்லவா என்றும் கேட்கிறோம். ஆக நூலுக்கு இலக்கணம் கூறவந்ததொல்காப்பியர், நூலுக்கு முன்னால் ஏதோ ஒரு கடவுளை வாழ்த்தவேண்டுமென்று கூறவில்லையென்றால், குறள் தொல்காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றியதென்று சொல்ல முடியுமா?

சரி, கடவுள் வாழ்த்து என்கிற தொடருக்கும் அந்த அதிகாரப் பொருளுக்கும் ஏதாவது தொடர்புண்டா? முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக்குறள்களில் எந்தக் குறளாவது கடவுளை வாழ்த்துவது என்கிற அர்த்தத்தில் இருக்கிறது என்று சொல்லிவிட முடியுமா?

அடுத்தபடி, கடவுளால் படைக்கப்பட்டவன் என்று நம்புகிற ஒரு ஆஸ்திகன்—அதாவது கடவுளை வணங்கி மோட்சமடைய வேண்டுமென்கிற ஆஸ்திகன் (பேராசைக்காரன்) ஆக இருந்தாலும் கடவுள் வாழ்த்து என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

"என்னாலும் பூஜிக்கத் தகுந்தவர்கள் பார்ப்பனர்கள்" என்று "பரமாத்மாவால்" சொல்லப்பட்டிருப்பதற்கேற்பப், பார்ப்பனர்கள் கடவுளை வாழ்த்துவது என்பது பொருத்தமாயிருந்தாலும், அந்த வர்ணாச்சிரம முறைப்படி சூத்திரனான தமிழன் கடவுளை வாழ்த்த முடியாதே.

இதை ஏன் இப்படி எடுத்துக் காட்டுகிறோம் என்றால், ஆரியரின் வர்ணாச்சிரம முறைகளை மனதிலெண்ணி அதற்கேற்றபடி குறளுடைய கருத்துகள் என்று காட்டப்பட்டு விட்டது. அதிகாரப் பெயர்கள் மாற்றபட்டிருக்கிறது; குறள் வைப்புமுறை மாற்றப்பட்டிருக்கிறது என்றெல்லாம் இன்று புலவர்ளே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இப்படியெல்லாம் மாற்றித் திரித்துத்தான் சநாதன தருமத்தை வற்புறுத்த வந்த நூல் என்பதாகச் செய்து விட்டார்கள். ஆனால் மதம் பிடித்த பண்டித சிகாமணிகளும் இதற்கு ஒத்துழைத்து வந்திருக்கிறார்கள் என்பதையும், அதே நேரத்தில்,

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒரு குலத்துக்கொரு நீதி"

என்று இரண்டிக்கும் வேறு பாட்டை எடுத்துக் காட்டியது போலச் சில புலவர்களாவது அந்தந்தக் காலங்களில் எடுத்துக்காட்டித்தான் வந்திருக்கின்றார்கள் என்றாலும், அந்த எடுத்துக்காட்டுகளால் பயன் ஒன்றும் ஏற்படுத்த முடியவில்லை என்பதையும் நாம் கூறித்தான் ஆக வேண்டும்.

ஆக திருக்குறள் என்பது மற்றொரு கீதை என்பது போன்ற உணர்ச்சி ஊட்டப்பட்டிருப்பது தான்—அந்த முறையில் நின்று அது விளக்கப்பட்டிருப்பதால் தான் அது இந்த நாட்டு மக்களிடையே வாழமுடியாமலிருந்து வருவதற்கு மற்றொரு காரணம் என்று கூறலாம்.

இந்த இரண்டு காரணங்களையும் எண்ணித்தான் குறள் மாநாட்டில், "எளிய நடையில் உண்மையான" உரைகாணவேண்டும்என்று முடிவு கட்டப் பட்டிருக்கிறது. இந்த உரை காண்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழு, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களைத் தலைவராகக்கொண்டிருக்கிறது. வெளிபடுத்தப்படும் உரை, பயன் விளைவிக்கத்தக்கதாயிருக்குமென்பது உறுதி என்றாலும், மிகவும் விரைவாக வெளிவர வேண்டுமென்பது நம் வேண்டுகோள்! திருக்குறளின் சீரிய கருத்துகள் திராவிடரிடையே பரவுவதற்குத், திராவிடச் செல்வர்கள் பெருந்துணையாய் நிற்கவேண்டியது அவர்கள் கடமை!

இதனால் குறளுடைய கருத்துகள் அத்தனையையும், இன்றைய மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நாம் கூறவரவில்லை. குறளாசிரியர் வாழ்ந்த காலம் வேறு—நாம் வாழும் காலம் வேறு. அவர் காலத்தியச் சூழ்நிலைக்கும், இப்போதையச் சூழ்நிலைக்கும் எவ்வளவோ பெருத்த வித்தியாசங்களுண்டு. "தெய்வத்தைத் தொழாதவளாய், விடிந்து எழுந்தவுடன் கணவனைக் தொழும் பிடுகின்ற மனைவியொருத்தி, மழையை நோக்கிப் பெய்க! என்றால் மழை பெய்யும்" என்பது போல அறிவுக்கு, நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்கள் குறளிலும் சில வுண்டு என்பதை நாம் மறுக்கவில்லை.

இப்படி காலத்திற்கொவ்வாத கருத்துகள் சில, குறளில் இருக்கிறதென்றாலும், ஆரிய நெறியில் சென்று, அவதிப்பட்டிருக்கும் திராவிடனுக்கு, அந்த அவதியைப் போக்கும் அருமருந்து—நல்ல பாதையைக் காட்டும் வழிகாட்டி திருக்குறள் என்பதைத் திராவிடன் உணரவேண்டும்.

நாட்டு நிலையுணர்ந்த நல் மருத்துவராம் தந்தை பெரியாரவர்களால், காலமறிந்து தரப்பட்டது இந்த ஊன்று கோல். இந்த ஊன்று கோலை ஊன்றி நடந்தால், ஆரியச் சேற்றில் அழுந்தவேண்டியதில்லை என்பதை நாடு உணர, நாம் பாடுபடவேண்டியதே இனி நம் கடன்!

---

## நாகையில்

## திராவிடர் திருநாள்,

(●)

நாகை ஜன. 17.

தைத் திங்கள் முதல் நாள் தொடங்கி 3 நாட்கள் தொடர்ந்து நடைபெற நிகழ்ச்சியில், முதல் நாள் விழா தோழர் விசயராகவலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாகம்மையார் படிப்பகத்திற்கான புதுக் கட்டிடத்தைத் தோழர் கந்தசாமியும், வாசகசாலையைத் தோழர் முருகையாவும்,நாகம்மையார்படத்தைத்தோழர் ஆறுமுகமும் திறந்து வைத்தனர். தோழர்களான குப்தா, ஷம்சுதீன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை 3-30 மணிக்குத் தோழர் ஜி. முருகையா அவர்கள் தலைமையில் இசையிலும், பேச்சிலும் பரிசுப் போட்டி நடந்தது. பல இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

2ம் நாள் திராவிடர் கழகக் கட்டிடத்தில் 10 மணிக்குத் தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. பெரியார், பக்கிரிசாமிப்

# யார் ?

# ஆரியரா ?

# அவர் அடிமைகளா ?

★

1. ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு நம் நாட்டிற்குப்பிழைக்க வந்தது யார்?

2. திராவிட இராவணப் பெரியாரை இராமாவதாரங்கொண்டு கொன்றது யார்?

3. திராவிட சூரபதுமனை முருகனாகவந்து கொன்றது யார்?

4. திராவிட இரணியனை நரசிங்கரூபங்கொண்டு கொன்றது யார்?

5. கம்சனை கிருட்டிணனாக வந்து கொன்றது யார்?

6. திராவிட நரகாசுரனை மகாவிஷ்ணு ரூபத்தில் கொன்றது யார்?

7. இராமலிங்கப் பெரியாரை வெட்டிப் பலியிட்டது யார்?

8. நந்தனாரை நெருப்பிலிட்டுக் கொன்றது யார்?

9. திருப்பாணாழ்வாரைத் தீயிலிட்டுக் கொன்றது யார்?

10. யாகத்தில் ஆடு, மாடு, குதிரை, பன்றி, இவைகளைச் சுட்டுத் தின்று சுராபான மருந்தியது யார்?

11. வருணாச்சிரம தருமத்தை ஆதரிப்பவன் யார்?

12. மனுதர்ம சாத்திரம் எழுதி நம்மை ஏமாற்றி வந்த கூட்டம் எது?

13. புராண ஆபாசக்கதைகளை எழுதி நம்மை ஏய்த்து வந்தவன் யார்?

14. திருப்பதிக்குப் போய் மொட்டையடிக்காமல் திரும்பி வருபவன் யார்?

15 உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவர்கள் யார்?

16. மோட்சலோகத்துக்கு வழிகாட்டி டிக்கட்டு கொடுப்பவன் யார்?

17. திவசம், திதி, கருமாதி, கலியாணம் சடங்குகள் நடத்தி வைப்பவன் யார்?

18. திராவிடன் கட்டிய கோவில்களில் அதிகாரம் செலுத்துபவன் யார்?

19. திராவிடன் கட்டிய சத்திர மானிய வருமானத்தில் உண்டு களிப்பவன் யார்?

20. கஷ்டப்பட்டுக் கோயில் கட்டியது யார்? உள்ளே புகுந்து கொள்ளையடிப்பது யார்?

21. சத்திரம் கட்டியது யார்? மானிய சொத்தில், சாய்ந்து சாப்பிடுவது யார்?

22. பல சாதிகளையும், மதங்களையும், உண்டு பண்ணியது யார்?

23. உடன் கட்டை ஏறும்படி செய்து பெண்களை வஞ்சித்தது யார்?

24. திராவிடன் ஆசாரத்துடன் பக்தி பண்ணினால் கண்ணைத் தோண்டிக் காட்டில் விட்டவன் யார்?

25. திராவிடன் ஆரியப்பாஷையைப் பேசியதற்காக நாக்கை அறுத்தது யார்?

26. திராவிடன் ஆரியப் பாஷையைக் காதால் கேட்டிருந்ததற்காகக் காதில் ஈயத்தைக் காய்ச்சி விட்டது யார்?

27. திராவிடனை அரக்கனாகவும், சூத்திரனாகவும், குரங்காகவும் எழுதிவைத்தவன் யார்?

28. திராவிட சோதரி சூர்ப்பநகையை மானபங்கம் செய்தவன் யார்?

29. வாலியைக் கொன்று மனைவியை சுக்ரீவனுக்குக் கூட்டி வைத்தது யார்?

30. இராவணனைக் கொன்று விபீடணனுக்குப் பட்டம் கட்டியது யார்?

31 சூரனைக் கொன்று சிங்கமுகனுக்குப்பட்டம் அளித்தது யார்?

32. திராவிட இனத்தவரை முன்னுக்கு வரவொட்டாமல் முட்டுக்கட்டை போடுவது யார்?

33. திராவிட நாட்டுப் பிரிவினையைக் கூடாதென்று கொக்கரிப்பவர் யார்?

34. உழைப்பின்றி ஊரார் உழைப்பில் உண்டுகளிப்பவன் யார்?

35. கடவுளைத் தரிசிக்கத்தரகனாக இருப்பவன் யார்?

36. ஆரிய சமாசம், ராட்டிர சேவாசங்கம், இந்துமகாசபை, கம்யூனிஸ்ட்கட்சி சோஷியலிஸ்ட் கட்சி இவைகளுக்குத் தலைவன், காரியதரிசி யார்?

37. வெள்ளையனை வெளியேற்றி, தென்னாட்டானைச் சுரண்டுபவன் யார்?

38. மதவெறி பிடித்து மதிகெட்டுத் தகாதகாரியம் செய்தலைபவன் யார்?

39. தர்ப்பைப் புல்லையும், பஞ்சாங்கத்தையும் காட்டி, இன்றும் ஏமாற்றுபவன் யார்?

40. சுவாமி என்று கும்பிட்டால் இடதுகையை நீட்டி உன்னை அவமதிப்பவன் யார்?

41. பெண்களை ஆடல், பாடல் கற்பித்து சினிமாவில் சேர்த்துப் பணம் சம்பாதிப்பவன் யார்?

42. தமிழ்நாடு வெறுத்த இராஜாஜியை வங்காளக் கவர்னராக்கியது யார்? இன்று கவர்னர்—ஜெனரலாக்கியது யார்?

43. கதர்வேட்டிகட்டிக் காங்கரசில் தலைமைப் பதவியிலிருப்பவர் யார்?

44. கெஞ்சிக் கூத்தாடி லஞ்சங் கேட்கும் பஞ்சாங்கம் யார்?

45. இந்திப் படிப்பைக் கட்டாயப் பாடமாகக் கொணர்ந்தது யார்?

46 நான்கு சாதிகளை உண்டு பண்ணியவன் யார்?

47. மதவெறி பிடித்தலையும்,

---

பிள்ளை, வ. உ. சி. படங்களைத் தோழர்களான குப்தா, விசயராகவலு, அறிவழகன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

மாலையில் அவுரித்திடலில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்களான குப்தா மு. கருணாநிதி, ஷம்சுதீன், ரெத்தினவேலு ஆகியோர் சொற்பெருக்காற்றினர்.

3-ம் நாள் கழகக் கட்டிடத்தில் காலை 10-மணிக்கு பேபி சரசா—சிவகாமசுந்தரி நடனமும் மாலையில் தமிழ் இசை விருந்தும், இரவில் நாகை என். டி. என். சபா நடிகர்களால் "சாந்தா அல்லது ஊழியின்" என்கிற நாடகமும் சிறப்பாக நடைபெற்றன.

மடையனும், முட்டாளும் யார்?

48. முதல் சாதி என்று தன்னைச் சொல்லிக் கொள்பவன் யார்?

49. ஜமீன் ஒழிப்பு மசோதாவைத் தடைசெய்தது யார்?

50. தொழிலாளிகூலி கேட்டதற்கு மலபார் போலீசை விட்டு அடித்தது யார்?

51. வில்வித்தை கற்ற ஏகலைவன் கட்டை விரலை நறுக்கிக் கொடுக்கும்படி கேட்டவன் யார்?

52. காப்பி ஓட்டல் முதல் கலெக்டராபீஸ் வரை உயர்ந்த பதவியிலிருப்பவன் யார்?

53. உலகில் கோடீஸ்வரனாயும், ஜமீன்தாரியாயுமிருப்பவன் யார்?

54. தாசில் வந்தால் கொம்பு ராசினாமாக் கொடுத்து விட்டால் சொம்பு என்று சொன்னது யார்?

55. வேதம் ஓதிப் பாதகம் விளைவிப்பவன் யார்?

56. நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை நம்மிடம் வரி வாங்குபவன் யார்?

57. ஹரிஜன சோதரரை அக்ரகாரத்துக்குள் விடாமல் தடுப்பவர் யார்?

58. சாதி வித்தியாசமேயில்லை எல்லோரும் ஒன்று எனக் கூறுபவன் யார்?

59. சாதி வேறு, சமயம் வேறு, கலை வேறு என்பவன் யார்?

60. சாதியைக்கடவுள் படைத்தார் என்று சொல்லி தர்ப்பை ஏந்துங் கைவாளேந்தும் என்றவன் யார்?

61. உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்றது யார்?

62. காந்தியார் இறந்த தினத்தன்று மிட்டாய் வழங்கியது யார்?

63. காந்தியார் சாம்பலை நதிகளில் கரைத்து விட்டது யார்?

64. காந்தியாருக்கு ராம்தூன் பசனைபண்ணி ஓலமிட்டழுதது யார்?

65. காந்தியார் மகனுக்குப் பெண் கொடுத்தது யார்?

66. காந்தியாரை மகானாக்கி, மகாத்மாவாக்கியது யார்?

67. காந்தியாருக்கு நிதிதிரட்டி ஏப்பமிடுவது யார்?

68. காந்தியாருக்குக் கோயில் கட்ட ஏற்பாடு செய்வது யார்?

69. காந்தியார் கோயிலுக்கு அர்ச்சகனாக வரப்போகிறவர் யார்?

70. காந்தியார் கொலை வழக்குகளைப் பிரசுரிக்கக்கூடாதென்பவர் யார்?

71. பெரியார் சொன்ன காந்தி சகாப்தம், காந்தி மதம், காந்தி தேசம் வேண்டாமென்றது யார்?

72. திராவிடர் இழிவு நீங்க அணிந்திருந்த கருப்புச் சட்டைகளுக்குத் தடை விதித்தது யார்?

73. காந்தியாரைச் சுட்டுக் கொன்றதை இருட்டடிப்புசெய்து விட்டது யார்?

74. காந்தியார் கொலைக்கு நியாயம் வழங்கும்படி கேட்ட கழகத்தவர்களைத் தடை உத்திரவு போட்டுச் சோதனையிட்டவர் யார்?

75. சரித்திர ஆதாரப்படி அன்றிலிருந்து கொலை செய்து வரும் கூட்டம் எது?

76. திராவிடனைத் தலையெடுக்காமல் தட்டி விட்டுக்கொண்டிருப்பவன் யார்?

77. திராவிடச் சம்புகன் தலையை வெட்டி ஆரியப்பிள்ளையைப் பிழைக்க வைத்தது யார்?

78. சுதேசமித்திரன், தினமணி, பாரததேவி, தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் யார்?

79. காந்தியாரைக் கொலை செய்த விநாயகக் கோட்சே கூட்டம் எது?

80. காந்தியார் சதிபாலோசனை சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளைக் களவாடியவன் யார்?

81. உலகம் போற்றும் உத்தமர் காந்தியார் உயிருக்கு உலை வைத்த கூட்டம் எது?

82. அடுத்துக் கெடுப்பதில் அசகாயசூரனாய், கூடியிருந்து குடி கெடுப்பவன் யார்?

83. தஞ்சை நாயக்கர் வம்சத்தை வேற்றரசரிடம் காட்டிக் கொடுத்தவன் யார்?

84. சமணர்களைக் கழுவேற்றியது யார்?

85. சந்திர குப்தனுக்கு சாம்ராச்சியம் கிடைக்கும்படி செய்தது யார்?

86. நவ நந்தர்களின் ஆட்சியை வேரறுத்தவன் யார்?

87. சிறுத்தொண்டனைப் பிள்ளைக்கறி சமைத்துக் கேட்டது யார்?

88. வல்லாள மகாராசாவின் மனைவியைப் பெண்டாளக் கேட்டது யார்?

89. அசோக வம்சத்தரசரை அழித்தவன் யார்?

90. சைவனுக்குக் கந்தபுராணமும், வைஷ்ணவனுக்கு இராம புராணமும் கட்டியதுயார்?

91. தேவடியாள் வீட்டில் தரகனாக இருப்பவன் யார்?

92. தாசிகளுக்குப் பரதநாட்டியம் கற்றுக்கொடுப்பவன் யார்?

93. அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி படாதபாடு படுத்தியவன் யார்?

94. திராவிட மக்களை ஏமாற்றிப் பிழைக்க வந்த கூட்டம் எது?

95. பல காமாந்தகாரக் கடவுளர்களையுண்டுபண்ணியது யார்?

96. நம்மைப்பல சாதிகளாக்கி மொழி, கலை, நாகரீகம், வாணிபம் ஆகிய பல துறைகளிலும் வீழ்ச்சியுறச் செய்தது யார்?

97. எண்ணத் தொலையாத இறைவனை உண்டாக்கி எழுதியது யார்?

98. கடவுளுக்கும் மனைவி, கூத்தி பிள்ளை குட்டிகள் இருப்பதாக எழுதியவன் யார்?

99. எவ்விதத் தொடர்புமின்றிச் சாஸ்திர ரீதியாகப் பிரித்து வைத்தது யார்?

100. காந்தியார் கொலைக்கு முன் திருவுளச் சீட்டுப் போட்டு ஒத்திகை நடத்திய கூட்டம் எது?

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு, சத்தியம், சமத்துவம், சாந்தி முதலான சகோதரத்துவ திட்டங்களைப் பரப்பி, வெற்றிபெற்ற மகத்தானமதம். பிறமதங்களே போல் பிரிவினையையும் பேதத்தையும் மக்களிடையே வளர்த்து வருவதல்ல இஸ்லாம். ஆகவே அறிவுப்பாதைக்கு அழைத்துச் செல்லும் ஒரு மதத்தை அழிக்க, அறிவுடைய எந்த சர்க்காரும் எண்ணக்கூடச் செய்யாது என்பதை இஸ்லாமிய இளவல்களும் அறிஞர்களும் தெரிந்து ஆவன செய்து திராவிடர் கழகத்தைப் பலப்படுத்தி, திராவிட நாட்டை தனிநாடாக்க, தயக்கமின்றி தயாராகும்படி பணிவுடன் வேண்டுகின்றேன்.

"டி. எம். பீர்முகம்மது"

ரோஜா முத்தையா

[4ம் பக்கத் தொடர்ச்சி]

விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான்.

வைத்தியநாத அய்யர் தன் மகள் வனஜாவிடம் ஏதோ இரகசியம் கூறினார்.

* *

இப்போது குலசேகரன் வைத்தியநாத அய்யரின் வீட்டுக்குச் சென்று வருவது சாதாரணமாகிவிட்டது. அன்று ஒரு நாள்...?

வைத்தியநாதரின் வீட்டின் உட்புறத்தில் உட்கார்ந்திருந்தான் சேகரன். வீட்டில் யாரும் காணப்படவில்லை. சிறிது நேரத்தில் தன் கண்களை யாரோ மூடுவது அறிந்து திரும்பினான். வனஜா அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் அவர்கள் இன—ஆரிய முறைப்படி—தன்னை அலங்கரித்திருந்தாள்!

அந்த அலங்காரம்...! அலங்காரமா அது? ஆபாசம்...!

குலசேகரனின் "வீட்டு விஜயம்" காரணமாக ஏற்பட்ட போதை அதிகமாயிற்று!

காதல் அடைதல்தான் உயிரியற்கையாயிற்றே! அத்துடன் காலமும் ஏற்றபடி அமைந்தால்...?

"ஏன்...வனஜா, வீட்டில் யாருமில்லையா?"

'யாருமில்லை' வெளியே போயிருக்கிறார்கள்...!

"......................!"

"......................"

"வனஜா...நமது...கா...த...ல்..?"

'வறண்டபாலை நிலமாகிவிடாதே..."

'ஏன்?

'என் பெற்றோர்கள்..."

"ஏதாவது கூறினார்களா அல்லது..."

"வண்டு தேனை உறிஞ்சிய பிறகு பறந்து விடுமாம்"

"கண்ணே! நான் தமிழன். நானா உன்னைக் கைவிடுவேன்?"

"ஆமாம்...ஆரம்பித்து விட்டீர்களே...நீங்கள் தமிழர்...நாங்கள் ஆரியர்...உங்கள் எதிரி..."

"நான் அப்படிக் கருதி சொல்லவில்லையே வனஜா"

"ம்ம்...எங்கள் இனத்தவர் ஒருவர் உங்கள் குலப்பெண்களை மணந்து கொண்டால் அவர்களுக்குச் சொத்துரிமை இல்லையென்று அப்பா...சொல்லுவார்கள். நீங்கள் தான் சுயமரியாதைக் காரராயிற்றே! அதற்குப் பழிக்குப் பழியாக எனக்கு ஏதாவது...?

'கண்ணே...உன்னிடமா...உனக்காக எனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் கொடுக்கத்தயாராக இருக்கின்றேனே! வேண்டுமானால் எனது உடைமையாவையும் உனக்கே எழுதித்தருகிறேன்"

'அப்படியா?...இனி நம் காதல் ஈடேற...!

காகிதமும் மையும் கொண்டு வரப்பட்டன. உரிமைச் சீட்டை எழுதி கையெழுத்திட்டு வனஜாவிடம் கொடுத்தான் குலசேகரன். காதலுக்காக உயிரைக்கூட தியாகம் செய்பவர்களாயிற்றே தமிழர்கள்! தமிழனின் சொத்துக்கு ஆரியம் உரிமை உடையதாகி விட்டது. தமிழினம் மாய வலையில் வீழ்ந்தது.

"வீட்டை விட்டு வெளியேறு!" சீறினான் வைத்தி. விழித்தான் குலசேகரன். வஞ்சகி வனஜா...அல்ல...தன் இனத்தின் "தியாகி" வனஜா—வெற்றிக்களிப்புடன் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தாள்.

"போடா...தடிப்பயலே...சனாதனத்தின் எதிரிகளுக்கெல்லாம் இந்த கதிதான்...ம்ம்...போறயா...?"

"வனஜா...வனஜா...நம்காதல்...?"

போடா...காதலாவது கத்திரிக்காயாவது!"

குலசேகரனுக்கு இவ்வுலகமேசுழல்வது போன்றிருந்தது. மதிகலங்கியது.

"துரோகிகளே! தங்கள் மனைவி மக்களை மாற்றானிடம் வாடகைக்கு விட்டு, அவர்கள் சொத்தைப் பிடுங்கிய பிறகு அவனை விரட்டி விட்டு, வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்கும்...துரோகிகளே"

"பார்ப்பனர்களை விடாதீர்கள். அவர்களுடைய பெண்களை...பெண்களா அவர்கள்! பேய்கள்! அவர்களை நம்பாதீர்கள்!...நம்பாதே...நம்பாதே!"

ஆம்! அவன் ஒரு பயித்தியக்காரன்.

* *

அதோ அப்பயித்தியக்காரன் கூச்சலிட்டுக் கொண்டு போகிறான்...பார்! சிறுவர்கள் பலர் சுற்றிச் செல்கின்றனர் அவனிடம்! அவர்களின் கையிலே கற்கள்! அவன்—பயித்தியம்—சாப்பிட்டு நாள் பல ஆயின. பயித்தியத்திற்கு யார் சோறு போடுவார்கள்?

அவனும் கூச்சலிடுகிறான். சிறுவர்களும் கூச்சலிட்டனர்.

"பயித்தியக்காரன் ...பயித்தியக்காரன்...பயித்தியக்காரன்"

"ஆ" ஒரு கூரிய கல் 'அவனது மண்டையில் பாய்ந்தது. கல்லால் அடித்த அந்த சிறுவனை ஆம். அவன் தான்—வைத்தியலிங்கம்...குலசேகரின் குமரன்—வஞ்சகி வனஜாவின் மகன்—அவனது திறமையை சிறுவர்கள் பாராட்டினர்!

ஆனால் அப்பயித்தியக்காரன்...?

பயித்தியம் நீங்கிவிட்டது. இவ்வுலகின் [illegible] விடுதலை பெற்று விட்டான்.

இறந்தால் என்ன?...அவன்தான் பயித்தியக்காரனாயிற்றே.

---

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி ஏதாகிலும் உளறினே...? உன்னையும் ஒரே வெட்டில் தீர்த்து விடுவேன்! ஜாக்கிரதை...!

சப்இன்ஸ்பெக்டர்:- [இரண்டு போலீஸ்காரர்களுடன் வந்ததும் பிரேதத்தைப் பார்த்துவிட்டு] அடடா...! கடைசியாக உனக்கு இந்தக் கதியா நேரவேண்டும்?

இரஞ்சன்:- வாங்க சார்! சப் இன்ஸ்பெக்டர் சார்! ராஜன் உங்கள் 'லாக்கப்பில்'தானே இருந்தான்? அந்தப் பாவிப் பயல் இங்கே எப்படி வரமுடிந்தது...?

சப் இன்ஸ்பெக்டர்:- ராஜன் நேரே இங்கேதான் வந்தானோ...?

இரஞ்சன்:- ஏன்! நீங்கள் அவனை வெளியில் விட்டுவிட்டீர்களா...?

சப் இன்ஸ்பெக்டர்:- 'ஷட்டப்' நான் கேட்ட கேள்விகளுக்குமட்டும் பதில் சொல்லுமய்யா!

இரஞ்சன்:- எனக்கு எப்படி சார் தெரியும்? அவன் நேராக இங்கு வந்தானோ! அல்லது எங்கேயாவது போய்விட்டு வந்தானோ? நீங்கள் அவனை எப்போது வெளியில் விட்டீர்கள்?

சப் இன்ஸ்பெக்டர்:- சாயங்காலம் அய்ந்து மணியிருக்கும்!

இரஞ்சன்:- [தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு] இப்போது மணி எட்டரையாச்சு! அவன் இங்கே வந்து விஸ்வனைச் சுட்டுவிட்டு ஓடிப்போய் அரைமணி நேரந்தானாகிறது. ஆகவே அவன் அவ்வளவு நேரமாக 'ரிவால்வர்' சம்பாதிப்பது பண்ணுவதில் பொழுதைப்போக்கியிருப்பான் என்று தோன்றுகிறது.

சப் இன்ஸ்பெக்டர்:- எங்கே அந்த 'ரிவால்வர்'?

இரஞ்சன்:- என்ன சார்! சுட்டவன் 'ரிவால்வரைக்' கொடுத்து விட்டா போவான்?

சப் இன்ஸ்பெக்டர்:- ஏன் இத்தனை தடியன்கள் இருந்தும் அவனை ஓடும்படி விட்டுவிட்டீர்கள்?

ஆடிட்டர்:- வேட்டுச் சத்தம் கேட்டதுமே எங்கள் [illegible] சார்!

சப் இன்ஸ்பெக்டர்:- ஓஹோ! அப்படியா...? இவள் யார்?

இராகவன்:- அவள்தான் நாட்டியக்கலாராணி...

ஆடிட்டர்:- தாசி கமலா!

சப் இன்ஸ்பெக்டர்:- ஏனம்மா! உன் கெர்ப்பம் கலங்கவில்லையே?

தாசி கமலா:- [பசப்பலாக] எனக்கு இன்னும் கெர்ப்பமே உண்டாகலிங்களே சார்...!

சப் இன்ஸ்பெக்டர்:- ரெம்ப நல்ல வேளையாகப் போச்சு! டேய் 1948-நீ பிணத்தை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போ! டேய் 1044-இவர்களை எல்லாம் ஸ்டேஷனுக்குக் கூட்டிக் கொண்டு வாடா...

தாசி கமலா:- நான் என்னத்துக்குங்க சார்...?

சப இன்ஸ்பெக்டர்:- பயப்படாதேம்மா! சாட்சி சொல்லத்தான!

இரஞ்சன்:- அவள் வேண்டாம் சார்! கோர்ட்டில் வந்து ஒன்றுக் கொன்று முரணாக உளறிக்கொட்டப போகிறாள்! எல்லாம் நாங்களே சொல்லிவிடுகிறோம் சார்!

சப் இன்ஸ்பெக்டர்:- என்னப்பா அது? இவள் வீட்டில்தானே சம்பவம் நடந்திருக்கிறது? இவளைச் சாட்சியாகப் போடாமல் வழியில் போகிற தடியன்களெல்லாம் வந்து சாட்சி சொல்லி விட்டால் போதுமா?

இரஞ்சன்:- ஏன் சார்! கோவித்துக் கொள்கிறீர்கள்? அவளுக்குச் சாட்சி சொல்லவெல்லாம் தெரியுமா? ஏதோ உங்களைப்போன்ற பெரிய மனிதர்களோடு கொஞ்சிக் குலாவிப் பழக்கப்பட்டவள்! கோர்ட்டைக் கண்டு அஞ்சி ஏதாவது உளறிவிடுவாளே என்று தானே சொல்கிறேன்...

சப் இன்ஸ்பெக்டர்:- ஓகோ! என்னிடம் கூடக் கொஞ்சுவாளோ?

இரஞ்சன்:- என்ன சார் அப்படிக் கேட்கிறீங்க? அவள் வீட்டுக்கு நீங்கள் வந்தால், உங்களோடு கொஞ்சுவாள்...கோர்ட்டில் உங்களைக் கண்டாலோ அஞ்சுவாள் இது சகஜம்தானே சார்...

சப் இன்ஸ்பெக்டர்:- சரிசரி...! அப்படியானால்...நீ கோர்ட்டுக்கு வரவேண்...ம்...நானே உன் வீட்டுக்கு வந்து [illegible]க்கொண்டிருக்கிறேன்...ஊம்...

தாசி கமலா:- [[illegible]கசமாகக் கண்வலை வீசுகிறாள்]

சப் இஸ்ன்பெக்டர்:- [சமாளிப்பாக] டேய் தடியன்களா! ஏண்டா! சும்மா நிக்கிறீங்க...? உம். ஆகட்டும் வேலை—நீங்களெல்லாம் வாங்கப்பா ஸ்டேஷனுக்கு.

## காட்சி 25.

[வீதி]

உறுப்பினர்:- சின்னான், சின்னாயி.

கதை அமைப்பு:- சின்னானும், சின்னாயியும் சின்ன எசமான் செத்துப் போனதற்காக அழுகின்றனர்]

சின்னாயி:- [அழுதுகொண்டே போகிறாள்]

சின்னான்:- [சின்னாயி அழுது கொண்டே வருவதைக்கண்ட சின்னான் தானும் அழுக ஆரம்பிக்கிறான்]

சின்னாயி:- அய்யய்யோ...! நீயும் ஏன் அழுதுக்கிட்டே வாறே...?

சின்னான்:-நீ அழுவுறீயேன்னு தான் நானும் அழுவுறேன்!

சின்னாயி:-சரிசரி அப்படின்னா அழு.......

இருவரும்:- [சேர்ந்து அழுது கொண்டே சிறிது தூரம் செல்கின்றனர்.]

சின்னான்:- ஆமாங்......இப்ப! நாம ஏன் அழுவுறோம்...?

சின்னாயி:- அடச்சனியனே! அது தெரியாதா உனக்கு...நம்ம சின்ன எசமானில்லை...

சின்னான்:-இல்லையே...?

சின்னாயி:- என்ன இல்லையே...?

சின்னான்:- சின்ன எசமான் வீட்லேஇல்லை...மில்லாபிஸுலே இருப்பாங்கனு சொல்றேன்...

சின்னாயி:- அவுங்க...மில்லாபிஸுலேயும் இல்லை...ஒன்னுலையுமில்லை...தாசி வூட்லே...சுட்டுக் கொன்னு போட்டாங்களாம்...

சின்னான்:-ஆங்...? நம்ம சின்ன எசமானையா சுட்டுக்கொன்னு போட்டாங்க...?

சின்னாயி:-ஆ......ம்......மாஹ்ற ஹறாஹ்றஹறாம்ஹறாம்...

சின்னான்:-அய்...யை...யோஹ்ற ஹறாஹ்றஹறாஹறாம்...

## காட்சி 26.

[முதலியார் வீடு]

உறுப்பினர்:-சின்னான், முதலியார், பத்மா, விமலா.

கதை அமைப்பு:-[விஸ்வன் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் விமலா மனங் குமுறிப் பித்திபிடித்தவளாகிறாள்]

சின்னான்:- [அலறி அழுது கொண்டு வருகிறான்]

முதலியார்:-[திடுக்கிட்டு] என்னடா அது! ஏண்டா அழுகிறே...?

பத்மா & விமலா } [சின்னானின் அலறல் கேட்டு ஓடி வருகின்றனர்]

சின்னான்:-சின்ன எசமானில்லிங்க! அவரைத் தாசி கமலா வூட்டுலே...சுட்டுக் கொன்னுட்டாங்கனு...ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கினு போயிருக்காங்க எசமான்...

மூவரும்:-ஆ...அய்யோ!!

முதலியார்:-என்ன! விஸ்வன் தாசி வீட்டில் சுட்டுக்கொல்லப்பட்டானா...? அந்தோ! விமலா...... உன் தலைவிதி இப்படியா இருக்க வேண்டும்...? அய்யோ! பத்மா விமலாவைப் பார்த்துக் கொள்— அடச் சின்னான்! எந்த ஆஸ்பத்திரிக்கடா கொண்டுபோனாங்க...?

சின்னான்:-பெரிய ஆஸ்பத்திரிக்குத்தான் எசமான்...

முதலியார்:-சரி வாடா போய்ப் பார்க்கலாம்...

[முதலியாரும் சின்னானும்செல்கின்றனர்]

பத்மா:-ஆ! அய்யோ!! தம்பி விஸ்வா...! உன்னை எந்தச் சண்டாளனடா சுட்டுக்கொன்றான்...? அய்யய்யோ...உன் மனக்கோட்டை எல்லாம் இடிந்து தகர்ந்ததே...? பிரம்ம தேவனே உன் தலையில் அற்பாயுள் என்று எழுதி விட்டானோ...? இல்லை! இல்லை!! இந்தச் சண்டாளியைத் தாலிகட்டிய தோஷமல்லவா என் தம்பியின் உயிரைக் குடித்து விட்டது?

அடி பாதகி! உன் சாபம் பலித்து விட்டதடி!! ஆனால் 'இனி நீயாவது சந்தோஷப்பட முடியுமாடி? எப்படியடி முடியும்? இன்று முதல் நீ ஒரு முண்டச்சியடி முண்டச்சி! ஆ...முண்டச்சி...!!

[என்று கூறி விமலாவின் பொட்டை அழித்துப் பூவைப் பிய்த்து, வளையல்களை உடைக்கிறாள்]

முண்டச்சிகளுந்த இந்[illegible] [illegible]டில் என்ன [illegible] [illegible] உனக்குத் தெரியுமாடி? என் தம்பியாவது உடல் துடிக்க, உயிர் பதைக்க ஒரே வினாடியில் பிணமாகியிருப்பான்! நீயோ...? உன்

ஆயுள்-காலமெல்லாம் இந்த சமுதாயக் கொடிய நெருப்பால் சுட்டுப் பொசுக்கப்படும் நடைப்பிணமடி... நடைப் பிணம்.

அடி பிணமே! உன் உயிருள்ள வரைக்கும் உன் இருதயத்தில் விரகதாபத் தீப் பற்றி வீறிட்டுக்குமுறுமடி எரிமலையைப் போன்று!— நெஞ்சைப் பிளந்து கொண்டுவரும் பெருமூச்சு பாலைவனப் புயலைப் போலுள்ளதடி!!, ஆ! அந்தக்கொடுமையை நினைக்க நானே அஞ்சுகிறேன்...ஏன்! நானும் உன் போன்ற ஒரு பெண் பிறவிதானேடி? எனக்குத் தெரியாதா அந்த வேதனை எப்படியிருக்குமென்று! என்ன செய்வது!! எல்லாம் உன் தலைவிதியடி தலை விதி...அய்யோ! தப்பி விஸ்வா...

[என்று அழுது கொண்டே உள்ளே செல்கிறாள்]

விமலா:-ஆங்...? நான் முண்டச்சி! நான்ஒருமுண்டச்சி!! நானா முண்டச்சி? நடைப்பிணம்! இனி என் இருதயம்? எரிமலை! பெருமூச்சு? பாலைவனப் புயல்! எல்லாம்...? விதி! விதி!! என் தலைவிதி!!! ஹாஹ்...ஹஹ்ஹஹ்ஹஹ்ஹ...என் தலை விதி...ஹாஹ்... ஹஹ்...ஹஹ்...தலை...விதி..... ஹாஹ் ஹஹ்...விதி? விதியாம் விதி...! ஏய் மதி இழந்த தமிழகமே? தலைவிதி என்று ஒன்றிருப்பதாக உனக்கு எப்போதிருந்துதெரியும்...? 'தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி மெய் வருந்தக் கூலிதரும்' என்று பாடினானே வள்ளுவன் அவன் என்ன முட்டாளோ? அவன் தமிழ் மறைக்குத் தந்தை அல்லவா?

விதி? ஹாஹ் ஹஹ்ஹஹ்ஹஹா... விதி?? விதி?? ஹாஹ்ஹஹ்ஹஹ்ஹஹ் ஹா...விதி? விதி எனும் சொல்லைப் புகுத்தியவர் யார்? எப்போது? ஏன்?

தமிழகத்தில் இளம் விதவைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காகவா? விதி? ஹாஹ் ஹஹ்ஹஹ்ஹஹா...

காதல்? 'காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்று அருளினாளே அவ்வை! அவள் என்ன பேதையோ? விதவைகள் விளைநிலமாக்கினானே தமிழகத்தை! அந்தவேதியன்தான் மேதையோ? ஹாஹ் ஹஹ்ஹஹ்....

பெண்கள்? பெண்கள்?? பெண்கள் சிறுமியாக இருக்கும்போது பெற்றோருக்கு அடிமை! வயது வந்தவுடன் பெற்றோரால் மாட்டி வைக்கப்படும் புருஷனுக்கு அடிமை!! வயது முதிர்ந்தவுடன் அவள் பெற்ற மகனுக்கே அவள் அடிமை!!! அடிமை! அடிமை!! அடிமை!!! முக்காலும் அடிமை... ஹாஹ் ஹஹ்ஹஹ்...

தமிழகத்தில், தமக்கை அடிமை, தாரம் அடிமை, தாய் அடிமை, தாய் நாடும் அடிமை ஹாஹ்ஹஹ்ஹஹ்ஹஹ்ஹஹ் ...விளைநிலமெல்லாம் அடிமையாக இருக்கும்போது......விளை பொருள்களுக்கு மட்டும் சுதந்திரம் வேண்டுமாம் சுதந்தரம்...!!!

எந்த அந்தர லோகத்திலிருந்து சுதந்தர எண்ணம் வந்து இந்த அடிமைகள் ஈன்ற குட்டிகளின் இருதயத்தில் முட்டுமோடி அறியேன் பராபரமே... ஹாஹ்ஹஹ் ஹாஹ்ஹஹ்ஹஹா......

[என்று இடி முழக்கம்போல் இடை இடையே சிரித்துச் சிரித்துப் பயித்தியக்காரியாகிவிடுகிறாள்.]

**இடை வேளை.**

---

நிகழ்ச்சிச் சித்திரம்

# வறுமையின் சொரூபம்.

★

"ஓடுறான்" "ஓடுறான்" "ஓடுறான்"

"விடாதே புடிபுடி"

சந்தைச் சந்தடியில் நின்ற மக்களெல்லாம் ஓடுவதற்கு வழிவிடுவது போல், சாலையின் இரு புறங்களிலும் ஒதுங்கி நின்றனர்.

முன்னே ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான் கையில் சிறு முடிச்சுடன். அவனைத் தொடர்ந்து, தலைதெறிக்க ஓடியவரின் நிலை, முடிச்சைப் பறிகொடுத்தவர் என்பதை விளக்கிற்று. இருவரும் ஓடினர்.

அறுபது கெஜ தூரம் சென்று திருடன் பிடிபட்டான். அங்கு அவன் அடிவாங்கியதை மக்களின் கண்கள் காணாமலில்லை. ஓடியவனின் ஒரு கை துரத்தியவனின் இரு கரங்களிலும் அகப்பட்டுக் கொண்டது. திருடனின் மற்றொரு கையில் அந்த முடிச்சு இருந்தது. இருவரும் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆங்காங்கே நின்று கொண்டிருந்த மக்கள் கூட்டமும் வந்து கொண்டிருந்தது. திருடனின் வாய் மட்டும் ஏதோ முணு முணுப்பது போல் மேலுங்கீழுமாய் அசைந்துகொண்டிருந்தது.

"அடேயப்பா! எப்படிடா ஓடினான் இந்த ஜனத்திரளை விலக்கிட்டு"

இது உருண்டு திரண்டு நின்றவரின் அங்கலாய்ப்பு.

"வாட்ட சாட்டமாயிருக்கான். திருடவந்துட்டான். பனைமரம் மாதிரி ஓசந்துட்டா போதுமா?" மரத்தில் சாய்ந்தபடியே இருந்தவரின் வாய் வீச்சு.

"முடிச்சிலே எவ்வளவப்பா இருந்திச்சி" எங்கிருந்தோ சைகிலில் வந்திறங்கிய ஆசாமியின் குறுக்குக் கேள்வி.

"அடக்கழிச்சல்லெ போவானே! முடிச்சிலேயிருக்கிறத்தே முழுங்கிக் கிட்டு வர்றானே! அவனுக்கு ஒண்ணுந் தெரியலையா?" வசைப்பிரியரின் சொல்லம்பு.

"இது மாதிரி நடுத்தெருவிலே திருடுறதெல்லாம் நேக்குப் புடிக்காதப்பா" இது மாதிரி 'சொல்லிக் கொண்டு வந்தார் பேங்மானேஜர் கிருஷ்ணசாமி சாஸ்திரி.

கூட்டமும் முச்சந்தி வந்து சேர்ந்தது.

"என்னாங்க, வரமாட்டேன்றான். புடிச்சி இளுத்தா "அடிக்காதீங்க" "அடிக்காதீங்க"ன்னு சொல்லித் தரையில் படுத்துக்கறான்" என்று சொல்லிக்கொண்டே திருடனைத் தூக்கிக்கொண்டு வந்து நிறுத்தினார் ஒருவர்.

"யாரும் ஒன்றுஞ் செய்யாதீர்கள்" என்று சொல்லுவது போல கையை அமர்த்தி விட்டு

திருடனைக் கேள்வி கேட்க ஆரம்பித்தார் இன்னொருவர்.

“ஏண்டா திருடனே!”

“இந்த ஊருமுழுக்க வேலைக்கு அலைஞ்சேங்க. ஒருத்தராவது வேலை கொடுக்க மாட்டேன்ட்டாங்க என்னாலையும்.........

அவன் அதற்குமேல் பேசவில்லை.

“இந்த முடிச்சிலே எவ்வள வய்யா வச்சிருந்தே”

திருடனின் எதிரியைப் பார்த்துக் கேட்ட கேள்வி இது.

“கட்டுச்சோறு கொஞ்சம் இருந்திச்சிங்க” என்ற பதிலை அங்கு நின்றிருந்த கூட்டம் எதிர் பார்க்கவே இல்லை. கட்டுச் சோற்றுப் பக்கம் கண்களெல்லாம் திரும்பின.

“நான் சோற்றுமூட்டைதான்” என்று நிரூபிப்பது போல, கிழிந்திருந்த துணிவழியாகக் கொட்டிய சோற்றைக் கண்டதும் அங்கிருந்த முகங்களெல்லாம் ஏமாற்றத்தால் பிரதிபலித்தன.

அடசோறு படைத்த நாடே! சலியாது கொடுத்த தமிழனின் நிலையை நீயே பார்!!

கே. ஆர். சாமி.


## படித்தீர்களா?

“மடித்திடுவோம் பகைவர்களை! பகைப்புலத்தை!
மடிக்குமது என்றாலும் மடித்தே மாள்வோம்!...”

இதுபோன்ற உணர்ச்சியைப்பெருக்கும் தொடர்கள் பலவுண்டு!

அறப்போரின் அடிப்படையையும் அதன்முடிவையும் அழகான செந்தமிழ்ப்பாக்களால் வெளியிட்டு, ஆளவந்தவர் செயல் கண்டு “சிரிக்கும் வையம்” என்று படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் பழனியப்பன். ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய கவிதை நூல்.

### சிரிக்கும் வையம்!

விலை அணா 0—4—0.

கிடைக்குமிடம்:—

நாதன் கம்பெனி, கச்சேரி வீதி, ஈரோடு.


(2ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்ததே. ஆனால் படித்துப் பட்டம் பெற்ற மேதாவி சொல்வதைக் கேளுங்கள்.

“சுருக்கமாகக் கூறுமிடத்து அவர் (காந்தியார்) ஒரு அவதாரமே. மேலிருந்து அவர் நம்மிடையே ஜனித்து இந்தப் பூவுலகத்தைத் தம் நிலைக்கு உயர்த்த முயன்றார். அடிமை இந்தியாவை விடுவிக்க வேண்டுமென்ற அவருடைய காரியத்தை முடித்து விட்டு, நன்னெறி சிதைந்து கிடந்த தேசத்தைக் கைதூக்கி விட்ட பின்னர், தாம் வந்த காரியம் பூர்த்தியானதை அறிந்து இதர அவதார புருடர்களைப் போல இப்பூவுலகத்தை நீத்தார்.”

என்று ஜெயப்பூர் காங்கரஸ் மாநாட்டிலே அண்டப்புளுகுகளை அமைத்துப் பட்டாபி பண்பாடி விட்டாரே. ஆண்டு ஒன்றுக்குள் தேசியத் தோழர்கள் புராணப்பண் பாடும்போது விரைவில் காந்தி புராணம் ஏற்படாதா? இதைப்போலவே மற்ற புராணங்களும் அண்டப்புளுகுகளைப் புகுத்தி எழுதப்பட்டன என்ற உண்மை இப்போதாவது புலப்படுகிறதா?

இரக்கமற்ற இந்துமதம் மடிந்தால் இந்து மதக்கடவுள் மடியும். கடவுளர்கள் மடிந்தால் இந்துமதப் புராணங்கள் புண்ணிய லோகத்திற்குச் சென்றுவிடும். இதிகாசங்கள் ஈசனுடன் இரண்டறக் கலந்துவிடும். மநுதர்மம் மயானம் சென்று மறைந்துவிடும். பிறகு மாக்கள் மக்களாகி, ஆங்கில நாட்டில் வசிப்பவர்கள் தங்களை ஆங்கிலேயர்கள் என்று சொல்லிக்கொள்வது போல், ரஷ்ய நாட்டில் வசிப்பவர்கள் தங்களை ரஷ்யர்களென்று சொல்லிக்கொள்வது போல், பர்மாவில் வசிக்கும் மக்கள் தங்களை பர்மியர்களென்று சொல்லிக் கொள்வது போல், திராவிட நாட்டில் வசிக்கும் நாம் திராவிடர்களாகி, திராவிடத் தனி சுதந்திர அரசு அமைத்து, உலகவரலாற்றிலே நாம் முன்னணியில் இடம் பெறலாம். பொதுவுடைமைத் தோழர்களே!

“இந்து மதம் நிலைத்திருக்கும் வரை இந்தியாவில் பொதுவுடைமை பரவாது” என்ற அமெரிக்காவின் சனாதிபதி ட்ரூமன் பொன்மொழிகளை உங்கள் முன்பு சமர்ப்பிக்கின்றேன்.

திராவிடநாட்டு முஸ்லீம்களே! கிறித்துவத்தோழர்களே! மக்களை மடமையிலாழ்த்தும் மதம் தேவைதானா? நீங்களும் சிந்தித்துப் பாருங்கள்! நீங்களும் இந்நாட்டு இந்துமதக் கொடுமையால் அல்லற்பட்டு இழிமக்களாகக் கருதப்பட்ட காரணத்தால் இழிவைப்போக்கிக் கொள்ள மற்ற மதங்களைத் தழுவநேரிட்டது. ஆதலால் நீங்களும் இந்நாட்டுத் திராவிட மக்களேயாவீர்கள். அவ்வுணர்ச்சி உங்களிடையே பீறிட்டெழவேண்டும். சாக்ரட்டிஸ்க்கு நஞ்சு கொடுத்தது மதமல்லவா? ஏசுவை இரையாக்கியது மதமல்லவா? ஆப்பரகாம் லிங்கனை அனாதைப் பிணமாக்கியது மதமல்லவா? இன்னும் மக்களை மடமையிலாழ்த்தும் மதம் தேவைதானா?

அனைவரும் ஒன்றுபடுவோம்! திராவிடர்களாகத் திகழ்வோம்! சுதந்தர திராவிடத் தனி அரசை நிறுவிடுவோம்! விரைந்து வாருங்கள்! அதற்குத் தடையாயுள்ள மதம்மடியட்டும்!!

“இளங்கோ”

## தாழ்த்தப்பட்டோர் கல்வி அபிவிருத்தி சங்கம்.

ஓமலூர் ஜன 17.

ஷை பெயரால் இன்று தோழர் அம்மாசி தலைமையில் கூடி ஒரு சங்கம் நிறுவப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் நிலைமை, எதிர்காலம் முதலிய பல பொருள்கள் குறித்துத் தோழர்களான டேவிட், ராமசாமி, பழனியப்பன், நாகப்பன், காளியப்பன், ஏசுநாதன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடந்தபின் நன்றிகூறலுடன் கூட்டம் கலைந்தது.

## இயற்கை எய்தினார்!

மூந்திய இந்தி எதிர்ப்புப் போரில் முதன் முதல் தன் உயிரைப் பலிதந்து, தமிழர்களின் மானத்தை நிலைநாட்டிய, இறவாப்புகழுடைய எந்தல் எல். நடராசன் அவர்களின் அன்னையார் சென்னையில் 16—1—49-ம் நாள் இயற்கை எய்தினார் என்பதைப் பெருவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சே. தேவநாயகம்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet. ERODE